# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை – 2016

# மதிப்பீட்டு அறிக்கை

## 62 – குடியியற் கல்வி

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2016

# மதிப்பீட்டு அறிக்கை

# 62 - குடியியற் கல்வி

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

முழுப்பதிப்புரிமையுடையது.

குடியியற் கல்வி(62)
மதிப்பீட்டு அறிக்கை - க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2016

**நிதி அனுசரணை**

எதிர்கால அறிவை மையமாகக் கொண்டு பாடசாலைக் கல்விமுறையை மாற்றியமைக்கும் செயற்றிட்டம் (TSEP - WB) மற்றும் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (ESPP) மூலம்

# அறிமுகம்

இலங்கையின் பொதுப்பரீட்சைகளில் அதிகமான பரீட்சார்த்திகள் பங்குபற்றுவது க.பொ.த. (சா/த) பரீட்சையிலே ஆகும். தேசிய ரீதியாக நடைபெறும் இப்பரீட்சையின் பெறுபேறுகள் அடிப்படையில் வழங்கப்படும் சான்றிதழ், உயர் கல்விக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுப்பதற்காக மாத்திரமன்றி நடுத்தர தொழில்வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதற்கும், தேசிய மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களில் சில வகையான கற்கை நெறிகளை மேற்கொள்வதற்கும் அடிப்படை தகைமையாக கொள்ளப்படும் அளவுகோலாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு ஏற்றுக்கொள்வதற்கான காரணமாக அமைவது இப்பரீட்சையில் காணப்படும் நம்பிக்கையும் செல்லுபடித்தன்மையும் அதேபோன்று உயர் தரமும் ஆகும்.

இப்பரீட்சையில் உயர் பெறுபேற்றினை பெற்றுக்கொள்வதற்காக வேண்டி மாணவர்களும் அவர்களின் அவ்எதிர்பார்ப்பினை நிறைவேற்றுவதற்காக ஆசிரியர்களும் பெற்றோர்களுமாக பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இம்மதிப்பீட்டு அறிக்கையானது அவர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு உதவும் வகையில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சார்த்திகளுக்கும், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடத்திற்கு பொறுப்பான உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வி ஆய்வாளர்களுக்கும் ஒருமித்த வகையில் பயன்படும் என்பதில் ஐயமில்லை. அதனால் இப்பகுப்பாய்வு அறிக்கையை அதிகமானவர்களின் பார்வைக்காக நூலகத்திற்கு வழங்குதல் மிகவும் பொருத்தமானதாகும்.

இப்பகுப்பாய்வு அறிக்கை மூன்று தொகுதிகளாக காணப்படுவதோடு பாட இலக்குகள் மற்றும் பாட அடைவு மட்டங்கள் தொடர்பான புள்ளி விபரங்களோடு இப்பாட வினாப்பத்திரத்திற்கான பரீட்சார்த்திகள் அடைவுகள் ஒவ்வொரு வினாவுக்குமான வெவ்வேறான வகையில் 1ஆம் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மதிப்பீடு மற்றும் பரிசீலனை துறையில் பயன்படுத்தப்படும் பண்டைய பரீட்சித்தல் கோட்பாடுகள் (Classical test theory) மற்றும் உருப்படி பிரதிபலிப்பு கோட்பாடுகள் (Item response theory) என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, பரீட்சைத்திணைக்களத்தின் பரீட்சித்தலுக்கும் அபிவிருத்திக்குமான கிளையினால் இவ்வாய்வு நடாத்தப்பட்டுள்ளது.

குடியியற் கல்வி பாடத்தின் I மற்றும் II பத்திரங்களுக்கான எதிர்பார்க்கப்படும் விடைகள், புள்ளிவழங்கல் முறை விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் பின்னூட்டல்களுக்கான ஆலோசனைகள் என்பன இவ்வறிக்கையின் IIம் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

வினாத்தாளின் ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கும்போது பரீட்சார்த்திகள் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள், கற்றல் - கற்பித்தல் தொடர்பான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் இவ்வறிக்கையின் IIIம் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பல்வேறு தேர்ச்சிகள் மற்றும் அத்தேர்ச்சி மட்டங்களை அடைவதற்கான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை வடிவமைத்துக்கொள்ளும் முறைகள் என்பவற்றிற்கு இது துணையாக அமையும் என எதிர்பார்க்கின்றேன்.

இவ்வறிக்கையின் பயன்பாட்டினை மேலும் தரமானதாக்கிக் கொள்வதற்காக வினைத்திறன் மிக்க வகையிலான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எங்களுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வறிக்கையினை தயாரிப்பதற்காக சிரமப்பட்ட நிர்வாக பரீட்சகர்கள் உள்ளிட்ட வளவாளர்களுக்கும் RD - பத்திரத்திற்கமைவாக விபரங்களை வழங்கிய பிரதான / மேலதிக பிரதான / உதவி பரீட்சகர்களுக்கும் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் அதிகாரிகள் உள்ளடங்களாக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

பீ.சனத் பூஜித
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2019 சனவரி 22
ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
பலவத்தை,
பத்தரமுல்ல.

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் | : | திரு. பீ.சனத் பூஜித<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | : | திருமதி. கயாத்திரி அபேகுணசேகர<br>பரீட்சை ஆணையாளர்<br>(ஆய்வு அபிவிருத்திக் கிளை) |
| இணைப்பாளர் | : | மனோமி செனவிரத்ன<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர் |
| பாட இணைப்பாளர் | : | எல். பீ. எஸ். சமரகோன்,<br>உதவிப் பரீட்சை ஆணையாளர்<br><br>திருமதி. நிமாலி சூரிய ஆரச்சி,<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| பதிப்பாக்கம் | : | திரு. ஏ. எல். எஸ். அபேவிக்ரம<br>சிரேஷ்ட விரிவுரையாளர்<br>சமூக விஞ்ஞானத்துறை<br>தேசிய கல்வி நிறுவகம்<br>மஹரகம. |
| தயாரிப்புக் குழு | : | திருமதி. ஏ. ஏ. நிலியா உபசேன<br>ஆசிரியர் சேவை I<br>மே.மா/ஹோ/ஜல்தர மகா வித்தியாலயம்,<br>ஹங்வெல்ல<br><br>திருமதி. ஏ. எஸ். சீ. தமயந்தி அதிகாரி<br>ஆசிரியர் சேவை I<br>கம்/ரத்னாவலி மகளிர் வித்தியாலயம்,<br>கம்பஹா.<br><br>திரு. டி. பி. ஆனந்த மங்களசூரிய<br>ஆசிரியர் ஆலோசகர்<br>வலயக்கல்வி காரியாலயம்,<br>கொழும்பு. |
| கணினி பக்க வடிவமைப்பு | : | காஞ்சனா சுப்ரமணியம்<br>கணினி தரவுப் பதிவாளர்<br>சுப்பையா இந்துஷா<br>கணினி தரவு உதவியாளர் |
| அட்டைப்பட வடிவமைப்பு | : | எஸ். எச். சமன் குமார<br>அரச நிர்வாக சேவை உதவியாளர் |
| மொழி பெயர்ப்பு | : | திரு. எஸ். கருணாகரன்<br>சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>சமூக விஞ்ஞானத்துறை,<br>தேசிய கல்வி நிறுவகம்<br>மஹரகம. |

# உள்ளடக்கம்


**பகுதி** I **பக்க எண்**

1. **பாட நோக்கங்கள் மற்றும் பாட அடைவுமட்டம் தொடர்பான விபரங்கள்**

1.1 **பாட நோக்கங்கள்** 1

1.2 **பாட அடைவு தொடர்பான புள்ளிவிபரத் தகவல்கள்**

1.2.1. பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2

1.2.2. பரீட்சார்த்திகள் தரங்களைப் பெற்றுக்கொண்ட விதம் 2

1.2.3 முதல்தடவையாக தோற்றிய பாடசாலைப்பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் - மாவட்ட அடிப்படையில் 3

1.2.4 முதல் தடவையாக தோற்றிய பாடசாலை பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் - கல்வி வலயங்கள் அடிப்படையில் 4

1.2.5 புள்ளிகள் பெற்றுள்ள விதம் - வகுப்பாயிடை அடிப்படையில் 7

1.3 **பாட அடைவு தொடர்பான பகுப்பாய்வு**

1.3.1 I ம் வினாப்பத்திரம் தொடர்பான அடைவுகள் 8

1.3.2 II ம் வினாப்பத்திரத்தில் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 9

1.3.3 II ம் வினாப்பத்திரத்தில் வினாக்களுக்கான புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 9

1.3.4 II ம் வினாப்பத்திரம் தொடர்பான அடைவுகள் 10

**பகுதி** II

2. **வினாக்கள் மற்றும் விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்கள்**

2.1 **I ம் வினா பத்திரம் மற்றும் விடையளிக்கப்பட்டுள்ளமை பற்றிய விபரம்**

2.1.1 I ம் வினாப்பத்திர அமைப்பு 12

2.1.2 I ம் வினாப்பத்திரம் 13

2.1.3. I ம் வினாப்பத்திற்கு எதிர்பார்க்கப்படும் பதில்களும் புள்ளியிடும் முறைகளும் 17

2.1.4 I ம் வினாப்பத்திரத்திற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகள் (வினாக்களின் அடிப்படையில்) 18

2.1.5 I ம் வினாப்பத்திரத்தில் ஒவ்வொரு வினாவுக்கும் விருப்பத்தெரிவு இடம்பெற்றுள்ள விதம் - சதவீத அடிப்படையில் 19

2.1.6 I ம் வினாப்பத்திரத்திற்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் 20

2.2 **II ம் வினாப்பத்திரம் மற்றும் விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள்**

2.2.1 II ம் வினாப்பத்திர அமைப்பு 21

2.2.2 II ம் வினாப்பத்திரத்திற்கு எதிர்பார்க்கப்படும் விடைகளும் புள்ளியிடும் முறைகளும் விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் 22

**பகுதி III**

3. **விடையளிக்கும்போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்**

3.1 விடையளிக்கும்போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் 45

3.2 கற்றல் - கற்பித்தல் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும் 47

# பகுதி I

## 1. பாடக் நோக்கங்களும் பாட அடைவு மட்டம் தொடர்பான விபரங்களும்

### 1.1 பாட நோக்கங்கள்

இப்பாடத்தினை கற்பதனால் மாணவர்,

* ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்கும் சட்டத்திற்கு கீழ்படியும் பிரசையாவார்.
* சூழலுக்கு இசைவாகச் செயற்படுவார்.
* பல்லின மக்களோடு சகவாழ்வை மேற்கொள்வார்.
* ஏனையோரின் கலாசாரத்தினை மதிப்பார்.
* வினைத்திறன் மிக்க பொருளாதார நடவடிக்கைகள் மூலம் நிலையான அபிவிருத்திக்கு பங்களிப்பார்.
* முரண்பாடுகள் குறைந்த சமாதானமான வாழ்க்கைக் கோளத்திற்குப் பழக்கப்படுவார்.

## 1.2 பாட அடைவுகள் தொடர்பான புள்ளிவிபரங்கள்

### 1.2.1 பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

| மொழி | பாடசாலை | தனிப்பட்ட | மொத்தம் |
|---|---|---|---|
| சிங்களம் | 81875 | 163 | 82038 |
| தமிழ் | 20252 | 186 | 20438 |
| ஆங்கிலம் | 334 | 213 | 547 |
| மொத்தம் | **102461** | **562** | **103023** |

அட்டவணை 1

### 1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம்

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்திகள் | | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | | |
| A | 13721 | 13.39 | 52 | 9.25 | 13773 | 13.37 |
| B | 12179 | 11.89 | 45 | 8.01 | 12224 | 11.87 |
| C | 26020 | 25.40 | 89 | 15.84 | 26109 | 25.34 |
| S | 28821 | 28.13 | 140 | 24.91 | 28961 | 28.11 |
| W | 21720 | 21.20 | 236 | 41.99 | 21956 | 21.31 |
| மொத்தம் | **102461** | **100.00** | **562** | **100.00** | **103023** | **100.00** |

அட்டவணை 2

1.2.3 மாவட்ட அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள முறை:

| மாவட்டம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 6862 | 940 | 13.70 | 679 | 9.90 | 1546 | 22.53 | 1988 | 28.97 | 5153 | 75.09 | 1709 | 24.91 |
| 2. கம்பஹா | 8208 | 860 | 10.48 | 821 | 10.00 | 1973 | 24.04 | 2450 | 29.85 | 6104 | 74.37 | 2104 | 25.63 |
| 3. களுத்துறை | 5161 | 906 | 17.55 | 668 | 12.94 | 1201 | 23.27 | 1374 | 26.62 | 4149 | 80.39 | 1012 | 19.61 |
| 4. கண்டி | 6549 | 1221 | 18.64 | 852 | 13.01 | 1647 | 25.15 | 1568 | 23.94 | 5288 | 80.75 | 1261 | 19.25 |
| 5. மாத்தளை | 2636 | 405 | 15.36 | 394 | 14.95 | 743 | 28.19 | 637 | 24.17 | 2179 | 82.66 | 457 | 17.34 |
| 6. நுவரெலியா | 3899 | 317 | 8.13 | 354 | 9.08 | 995 | 25.52 | 1263 | 32.39 | 2929 | 75.12 | 970 | 24.88 |
| 7. காலி | 5265 | 747 | 14.19 | 728 | 13.83 | 1444 | 27.43 | 1468 | 27.88 | 4387 | 83.32 | 878 | 16.68 |
| 8. மாத்தறை | 3970 | 858 | 21.61 | 599 | 15.09 | 1006 | 25.34 | 1018 | 25.64 | 3481 | 87.68 | 489 | 12.32 |
| 9. அம்பாந்தோட்டை | 4173 | 758 | 18.16 | 649 | 15.55 | 1299 | 31.13 | 987 | 23.65 | 3693 | 88.50 | 480 | 11.50 |
| 10. யாழ்ப்பாணம் | 3673 | 94 | 2.56 | 140 | 3.81 | 488 | 13.29 | 1149 | 31.28 | 1871 | 50.94 | 1802 | 49.06 |
| 11. கிளிநொச்சி | 721 | 15 | 2.08 | 24 | 3.33 | 111 | 15.40 | 247 | 34.26 | 397 | 55.06 | 324 | 44.94 |
| 12. மன்னார் | 482 | 28 | 5.81 | 35 | 7.26 | 121 | 25.10 | 203 | 42.12 | 387 | 80.29 | 95 | 19.71 |
| 13. வவுனியா | 686 | 20 | 2.92 | 44 | 6.41 | 162 | 23.62 | 247 | 36.01 | 473 | 68.95 | 213 | 31.05 |
| 14. முல்லைத்தீவ[ | 542 | 16 | 2.95 | 33 | 6.09 | 117 | 21.59 | 207 | 38.19 | 373 | 68.82 | 169 | 31.18 |
| 15. மட்டக்களப்பு | 5038 | 337 | 6.69 | 376 | 7.46 | 1066 | 21.16 | 1662 | 32.99 | 3441 | 68.30 | 1597 | 31.70 |
| 16. அம்பாறை | 5113 | 770 | 15.06 | 742 | 14.51 | 1516 | 29.65 | 1368 | 26.76 | 4396 | 85.98 | 717 | 14.02 |
| 17. திருகோணமலை | 1804 | 168 | 9.31 | 190 | 10.53 | 409 | 22.67 | 606 | 33.59 | 1373 | 76.11 | 431 | 23.89 |
| 18. குருநாகல் | 9159 | 1438 | 15.70 | 1245 | 13.59 | 2516 | 27.47 | 2398 | 26.18 | 7597 | 82.95 | 1562 | 17.05 |
| 19. புத்தளம் | 3435 | 495 | 14.41 | 396 | 11.53 | 900 | 26.20 | 1002 | 29.17 | 2793 | 81.31 | 642 | 18.69 |
| 20. அனுராதபுரம் | 5920 | 777 | 13.13 | 715 | 12.08 | 1607 | 27.15 | 1711 | 28.90 | 4810 | 81.25 | 1110 | 18.75 |
| 21. பொலன்னறுவை | 2310 | 260 | 11.26 | 280 | 12.12 | 625 | 27.06 | 684 | 29.61 | 1849 | 80.04 | 461 | 19.96 |
| 22. பதுளை | 4962 | 688 | 13.87 | 666 | 13.42 | 1333 | 26.86 | 1374 | 27.69 | 4061 | 81.84 | 901 | 18.16 |
| 23. மொனராகலை | 2949 | 377 | 12.78 | 398 | 13.50 | 798 | 27.06 | 814 | 27.60 | 2387 | 80.94 | 562 | 19.06 |
| 24. இரத்தினபுரி | 5441 | 783 | 14.39 | 726 | 13.34 | 1497 | 27.51 | 1418 | 26.06 | 4424 | 81.31 | 1017 | 18.69 |
| 25. கேகாலை | 3503 | 443 | 12.65 | 425 | 12.13 | 900 | 25.69 | 978 | 27.92 | 2746 | 78.39 | 757 | 21.61 |
| **அகில இலங்கை** | **102461** | **13721** | **13.39** | **12179** | **11.89** | **26020** | **25.40** | **28821** | **28.13** | **80741** | **78.80** | **21720** | **21.20** |

**அட்டவணை 3**

## 1.2.4 கல்வி வலய அடிப்படையில் முதன் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள முறை :

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாத-வர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 1768 | 351 | 19.85 | 185 | 10.46 | 331 | 18.72 | 448 | 25.34 | 1315 | 74.38 | 453 | 25.62 |
| 2. ஹோமாகம | 1379 | 167 | 12.11 | 125 | 9.06 | 277 | 20.09 | 383 | 27.77 | 952 | 69.04 | 427 | 30.96 |
| 3. ஸ்ரீ ஜயவர்த்தனபுர | 2176 | 236 | 10.85 | 204 | 9.38 | 549 | 25.23 | 712 | 32.72 | 1701 | 78.17 | 475 | 21.83 |
| 4. பிலியந்தல | 1539 | 186 | 12.09 | 165 | 10.72 | 389 | 25.28 | 445 | 28.91 | 1185 | 77 | 354 | 23 |
| 5. கம்பஹா | 2040 | 283 | 13.87 | 255 | 12.5 | 479 | 23.48 | 552 | 27.06 | 1569 | 76.91 | 471 | 23.09 |
| 6 மினுவாங்கொட | 1734 | 233 | 13.44 | 209 | 12.05 | 459 | 26.47 | 470 | 27.1 | 1371 | 79.07 | 363 | 20.93 |
| 7. நீர்கொழும்பு | 1931 | 165 | 8.54 | 146 | 7.56 | 410 | 21.23 | 561 | 29.05 | 1282 | 66.39 | 649 | 33.61 |
| 8. களனி | 2503 | 179 | 7.15 | 211 | 8.43 | 625 | 24.97 | 867 | 34.64 | 1882 | 75.19 | 621 | 24.81 |
| 9. களுத்துறை | 1751 | 215 | 12.28 | 183 | 10.45 | 382 | 21.82 | 530 | 30.27 | 1310 | 74.81 | 441 | 25.19 |
| 10. மத்துகம | 1606 | 442 | 27.52 | 263 | 16.38 | 393 | 24.47 | 331 | 20.61 | 1429 | 88.98 | 177 | 11.02 |
| 11. ஹொரணை | 1804 | 249 | 13.8 | 222 | 12.31 | 426 | 23.61 | 513 | 28.44 | 1410 | 78.16 | 394 | 21.84 |
| 12. கண்டி | 2290 | 663 | 28.95 | 336 | 14.67 | 576 | 25.15 | 443 | 19.34 | 2018 | 88.12 | 272 | 11.88 |
| 13. தெனுவர | 561 | 95 | 16.93 | 95 | 16.93 | 144 | 25.67 | 130 | 23.17 | 464 | 82.71 | 97 | 17.29 |
| 14. கம்பளை | 1268 | 173 | 13.64 | 119 | 9.38 | 283 | 22.32 | 346 | 27.29 | 921 | 72.63 | 347 | 27.37 |
| 15. தெல்தெனியா | 757 | 99 | 13.08 | 96 | 12.68 | 203 | 26.82 | 190 | 25.1 | 588 | 77.68 | 169 | 22.32 |
| 16. வத்தேகம | 771 | 80 | 10.38 | 88 | 11.41 | 208 | 26.98 | 212 | 27.5 | 588 | 76.26 | 183 | 23.74 |
| 17. கட்டுகஸ்தொட்ட | 902 | 111 | 12.31 | 118 | 13.08 | 233 | 25.83 | 247 | 27.38 | 709 | 78.6 | 193 | 21.4 |
| 18. மாத்தளை | 1214 | 240 | 19.77 | 190 | 15.65 | 320 | 26.36 | 280 | 23.06 | 1030 | 84.84 | 184 | 15.16 |
| 19. கலேவெவ | 1031 | 108 | 10.48 | 141 | 13.68 | 323 | 31.33 | 272 | 26.38 | 844 | 81.86 | 187 | 18.14 |
| 20. நாஉல | 188 | 32 | 17.02 | 33 | 17.55 | 57 | 30.32 | 33 | 17.55 | 155 | 82.45 | 33 | 17.55 |
| 21. வில்கமுவ | 203 | 25 | 12.32 | 30 | 14.78 | 43 | 21.18 | 52 | 25.62 | 150 | 73.89 | 53 | 26.11 |
| 22. நுவரெலியா | 1159 | 52 | 4.49 | 102 | 8.8 | 330 | 28.47 | 387 | 33.39 | 871 | 75.15 | 288 | 24.85 |
| 23. கொத்மலை | 706 | 64 | 9.07 | 57 | 8.07 | 159 | 22.52 | 221 | 31.3 | 501 | 70.96 | 205 | 29.04 |
| 24. ஹட்டன் | 983 | 57 | 5.8 | 67 | 6.82 | 263 | 26.75 | 378 | 38.45 | 765 | 77.82 | 218 | 22.18 |
| 25. வலப்பனை | 453 | 76 | 16.78 | 63 | 13.91 | 108 | 23.84 | 109 | 24.06 | 356 | 78.59 | 97 | 21.41 |
| 26. ஹங்குரன்கெத்த | 598 | 68 | 11.37 | 65 | 10.87 | 135 | 22.58 | 168 | 28.09 | 436 | 72.91 | 162 | 27.09 |
| 27. காலி | 2125 | 321 | 15.11 | 282 | 13.27 | 539 | 25.36 | 610 | 28.71 | 1752 | 82.45 | 373 | 17.55 |
| 28. எல்பிட்டிய | 1246 | 179 | 14.37 | 187 | 15.01 | 383 | 30.74 | 318 | 25.52 | 1067 | 85.63 | 179 | 14.37 |
| 29. அம்பலாங்கொடை | 1118 | 125 | 11.18 | 135 | 12.08 | 311 | 27.82 | 325 | 29.07 | 896 | 80.14 | 222 | 19.86 |
| 30. உடுகம | 776 | 122 | 15.72 | 124 | 15.98 | 211 | 27.19 | 215 | 27.71 | 672 | 86.6 | 104 | 13.4 |
| 31. மாத்தறை | 1668 | 333 | 19.96 | 239 | 14.33 | 434 | 26.02 | 427 | 25.6 | 1433 | 85.91 | 235 | 14.09 |
| 32. அக்குரஸ்ஸ | 645 | 187 | 28.99 | 100 | 15.5 | 135 | 20.93 | 164 | 25.43 | 586 | 90.85 | 59 | 9.15 |
| 33. முலடியன-ஹக்மன | 746 | 182 | 24.4 | 107 | 14.34 | 193 | 25.87 | 171 | 22.92 | 653 | 87.53 | 93 | 12.47 |
| 34. மொறவக்க-தெனியாய | 911 | 156 | 17.12 | 153 | 16.79 | 244 | 26.78 | 256 | 28.1 | 809 | 88.8 | 102 | 11.2 |

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 35. தங்கல்லை | 1084 | 188 | 17.34 | 163 | 15.04 | 311 | 28.69 | 280 | 25.83 | 942 | 86.9 | 142 | 13.1 |
| 36. அம்பாந்தோட்டை | 1972 | 317 | 16.08 | 256 | 12.98 | 628 | 31.85 | 493 | 25 | 1694 | 85.9 | 278 | 14.1 |
| 37. வலஸ்முல்லை | 1117 | 253 | 22.65 | 230 | 20.59 | 360 | 32.23 | 214 | 19.16 | 1057 | 94.63 | 60 | 5.37 |
| 38. யாழ்ப்பாணம் | 991 | 24 | 2.42 | 50 | 5.05 | 156 | 15.74 | 304 | 30.68 | 534 | 53.88 | 457 | 46.12 |
| 39. தீவகம் | 240 | 4 | 1.67 | 11 | 4.58 | 49 | 20.42 | 89 | 37.08 | 153 | 63.75 | 87 | 36.25 |
| 40. தென்மராட்சி | 414 | 16 | 3.86 | 18 | 4.35 | 75 | 18.12 | 126 | 30.43 | 235 | 56.76 | 179 | 43.24 |
| 41. வலிகாமம் | 1565 | 37 | 2.36 | 51 | 3.26 | 165 | 10.54 | 480 | 30.67 | 733 | 46.84 | 832 | 53.16 |
| 42. வடமராட்சி | 463 | 13 | 2.81 | 10 | 2.16 | 43 | 9.29 | 150 | 32.4 | 216 | 46.65 | 247 | 53.35 |
| 43. கிளிநொச்சி | 721 | 15 | 2.08 | 24 | 3.33 | 111 | 15.4 | 247 | 34.26 | 397 | 55.06 | 324 | 44.94 |
| 44. மன்னார் | 323 | 24 | 7.43 | 27 | 8.36 | 83 | 25.7 | 129 | 39.94 | 263 | 81.42 | 60 | 18.58 |
| 45. மடு | 159 | 4 | 2.52 | 8 | 5.03 | 38 | 23.9 | 74 | 46.54 | 124 | 77.99 | 35 | 22.01 |
| 46. வவுனியா - தெற்கு | 479 | 11 | 2.3 | 28 | 5.85 | 99 | 20.67 | 178 | 37.16 | 316 | 65.97 | 163 | 34.03 |
| 47. வவுனியா - வடக்கு | 207 | 9 | 4.35 | 16 | 7.73 | 63 | 30.43 | 69 | 33.33 | 157 | 75.85 | 50 | 24.15 |
| 48. முல்லைத்தீவு | 394 | 10 | 2.54 | 25 | 6.35 | 89 | 22.59 | 156 | 39.59 | 280 | 71.07 | 114 | 28.93 |
| 49. துணுக்காய் | 148 | 6 | 4.05 | 8 | 5.41 | 28 | 18.92 | 51 | 34.46 | 93 | 62.84 | 55 | 37.16 |
| 50. மட்டக்களப்பு | 1343 | 54 | 4.02 | 94 | 7 | 267 | 19.88 | 416 | 30.98 | 831 | 61.88 | 512 | 38.12 |
| 51. கல்குடா | 902 | 23 | 2.55 | 42 | 4.66 | 133 | 14.75 | 329 | 36.47 | 527 | 58.43 | 375 | 41.57 |
| 52. பட்டிருப்பு | 949 | 67 | 7.06 | 91 | 9.59 | 244 | 25.71 | 346 | 36.46 | 748 | 78.82 | 201 | 21.18 |
| 53. மட்டக்களப்பு -மத்தி | 1003 | 168 | 16.75 | 120 | 11.96 | 277 | 27.62 | 287 | 28.61 | 852 | 84.95 | 151 | 15.05 |
| 54. மட்டக்களப்பு -மேற்கு | 841 | 25 | 2.97 | 29 | 3.45 | 145 | 17.24 | 284 | 33.77 | 483 | 57.43 | 358 | 42.57 |
| 55. அம்பாறை | 1378 | 199 | 14.44 | 182 | 13.21 | 402 | 29.17 | 355 | 25.76 | 1138 | 82.58 | 240 | 17.42 |
| 56. கல்முனை | 1777 | 334 | 18.8 | 293 | 16.49 | 524 | 29.49 | 456 | 25.66 | 1607 | 90.43 | 170 | 9.57 |
| 57. சம்மாந்துறை | 613 | 49 | 7.99 | 83 | 13.54 | 199 | 32.46 | 182 | 29.69 | 513 | 83.69 | 100 | 16.31 |
| 58. மஹாஓய | 452 | 72 | 15.93 | 50 | 11.06 | 111 | 24.56 | 121 | 26.77 | 354 | 78.32 | 98 | 21.68 |
| 59. தெஹியத்தகண்டிய | 455 | 43 | 9.45 | 63 | 13.85 | 134 | 29.45 | 133 | 29.23 | 373 | 81.98 | 82 | 18.02 |
| 60. அக்கரைப்பற்று | 438 | 73 | 16.67 | 71 | 16.21 | 146 | 33.33 | 121 | 27.63 | 411 | 93.84 | 27 | 6.16 |
| 61. திருக்கோவில் | 443 | 24 | 5.42 | 35 | 7.9 | 107 | 24.15 | 180 | 40.63 | 346 | 78.1 | 97 | 21.9 |
| 62. திருகோணமலை | 172 | 12 | 6.98 | 17 | 9.88 | 38 | 22.09 | 40 | 23.26 | 107 | 62.21 | 65 | 37.79 |
| 63. மூதூர் | 405 | 43 | 10.62 | 51 | 12.59 | 93 | 22.96 | 148 | 36.54 | 335 | 82.72 | 70 | 17.28 |
| 64. கந்தளாய் | 357 | 33 | 9.24 | 49 | 13.73 | 84 | 23.53 | 110 | 30.81 | 276 | 77.31 | 81 | 22.69 |
| 65. கிண்ணியா | 210 | 27 | 12.86 | 18 | 8.57 | 38 | 18.1 | 66 | 31.43 | 149 | 70.95 | 61 | 29.05 |
| 66. திருகோணமலை-வடக்கு | 217 | 29 | 13.36 | 20 | 9.22 | 49 | 22.58 | 62 | 28.57 | 160 | 73.73 | 57 | 26.27 |
| 67. குருநாகல் | 1961 | 299 | 15.25 | 229 | 11.68 | 473 | 24.12 | 530 | 27.03 | 1531 | 78.07 | 430 | 21.93 |
| 68. குளியாப்பிட்டிய | 1652 | 299 | 18.1 | 241 | 14.59 | 479 | 29 | 416 | 25.18 | 1435 | 86.86 | 217 | 13.14 |
| 69 நிக்கவெரட்டிய | 1203 | 256 | 21.28 | 199 | 16.54 | 333 | 27.68 | 281 | 23.36 | 1069 | 88.86 | 134 | 11.14 |
| 70. மாகோ | 1568 | 284 | 18.11 | 264 | 16.84 | 473 | 30.17 | 356 | 22.7 | 1377 | 87.82 | 191 | 12.18 |
| 71. கிரியுள்ள | 1454 | 150 | 10.32 | 173 | 11.9 | 387 | 26.62 | 430 | 29.57 | 1140 | 78.4 | 314 | 21.6 |
| 72. இப்பாகமுவ | 1321 | 150 | 11.36 | 139 | 10.52 | 371 | 28.08 | 385 | 29.14 | 1045 | 79.11 | 276 | 20.89 |
| 73. புத்தளம் | 1858 | 270 | 14.53 | 221 | 11.89 | 499 | 26.86 | 534 | 28.74 | 1524 | 82.02 | 334 | 17.98 |
| 74. சிலாபம் | 1577 | 225 | 14.27 | 175 | 11.1 | 401 | 25.43 | 468 | 29.68 | 1269 | 80.47 | 308 | 19.53 |

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 75. அனுராதபுரம் | 2115 | 340 | 16.08 | 261 | 12.34 | 564 | 26.67 | 551 | 26.05 | 1716 | 81.13 | 399 | 18.87 |
| 76. தம்புத்தேகம | 1086 | 137 | 12.62 | 136 | 12.52 | 276 | 25.41 | 348 | 32.04 | 897 | 82.6 | 189 | 17.4 |
| 77. கெக்கிராவ | 1085 | 159 | 14.65 | 127 | 11.71 | 295 | 27.19 | 303 | 27.93 | 884 | 81.47 | 201 | 18.53 |
| 78. கலென்பின்துனுவெவ | 626 | 65 | 10.38 | 74 | 11.82 | 184 | 29.39 | 181 | 28.91 | 504 | 80.51 | 122 | 19.49 |
| 79. கெபித்திகொல்லாவ | 1008 | 76 | 7.54 | 117 | 11.61 | 288 | 28.57 | 328 | 32.54 | 809 | 80.26 | 199 | 19.74 |
| 80. பொலன்னறுவ | 622 | 81 | 13.02 | 66 | 10.61 | 146 | 23.47 | 204 | 32.8 | 497 | 79.9 | 125 | 20.1 |
| 81. ஹிங்குரக்கொடை | 1064 | 119 | 11.18 | 128 | 12.03 | 287 | 26.97 | 308 | 28.95 | 842 | 79.14 | 222 | 20.86 |
| 82. திம்புலாகல | 624 | 60 | 9.62 | 86 | 13.78 | 192 | 30.77 | 172 | 27.56 | 510 | 81.73 | 114 | 18.27 |
| 83. பதுளை | 1016 | 177 | 17.42 | 121 | 11.91 | 283 | 27.85 | 265 | 26.08 | 846 | 83.27 | 170 | 16.73 |
| 84. பண்டாரவளை | 890 | 131 | 14.72 | 114 | 12.81 | 226 | 25.39 | 244 | 27.42 | 715 | 80.34 | 175 | 19.66 |
| 85. மஹியங்கனை | 1127 | 140 | 12.42 | 141 | 12.51 | 297 | 26.35 | 310 | 27.51 | 888 | 78.79 | 239 | 21.21 |
| 86. வெலிமடை | 795 | 107 | 13.46 | 118 | 14.84 | 216 | 27.17 | 234 | 29.43 | 675 | 84.91 | 120 | 15.09 |
| 87. பசறை | 617 | 59 | 9.56 | 96 | 15.56 | 178 | 28.85 | 175 | 28.36 | 508 | 82.33 | 109 | 17.67 |
| 88.வியலுவ | 517 | 74 | 14.31 | 76 | 14.7 | 133 | 25.73 | 146 | 28.24 | 429 | 82.98 | 88 | 17.02 |
| 89. மொனராகலை | 775 | 96 | 12.39 | 109 | 14.06 | 217 | 28 | 208 | 26.84 | 630 | 81.29 | 145 | 18.71 |
| 90. வெல்லவாய | 1423 | 164 | 11.52 | 181 | 12.72 | 353 | 24.81 | 421 | 29.59 | 1119 | 78.64 | 304 | 21.36 |
| 91. பிபிலை | 751 | 117 | 15.58 | 108 | 14.38 | 228 | 30.36 | 185 | 24.63 | 638 | 84.95 | 113 | 15.05 |
| 92. இரத்தினபுரி | 2143 | 390 | 18.2 | 303 | 14.14 | 543 | 25.34 | 509 | 23.75 | 1745 | 81.43 | 398 | 18.57 |
| 93. பலாங்கொடை | 894 | 135 | 15.1 | 104 | 11.63 | 233 | 26.06 | 258 | 28.86 | 730 | 81.66 | 164 | 18.34 |
| 94. நிவித்திகல | 1040 | 117 | 11.25 | 145 | 13.94 | 306 | 29.42 | 275 | 26.44 | 843 | 81.06 | 197 | 18.94 |
| 95. எம்பிலிபிடிய | 1364 | 141 | 10.34 | 174 | 12.76 | 415 | 30.43 | 376 | 27.57 | 1106 | 81.09 | 258 | 18.91 |
| 96. கேகாலை | 1323 | 202 | 15.27 | 149 | 11.26 | 318 | 24.04 | 377 | 28.5 | 1046 | 79.06 | 277 | 20.94 |
| 97. மாவனல்லை | 1032 | 129 | 12.5 | 135 | 13.08 | 270 | 26.16 | 261 | 25.29 | 795 | 77.03 | 237 | 22.97 |
| 98. தெஹிஓவிட்ட | 1148 | 112 | 9.76 | 141 | 12.28 | 312 | 27.18 | 340 | 29.62 | 905 | 78.83 | 243 | 21.17 |
| மொத்தம் | **102461** | **13721** | **13.39** | **12179** | **11.89** | **26020** | **25.40** | **28821** | **28.13** | **80741** | **78.80** | **21720** | **21.20** |

**அட்டவணை 4**

## 1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | சதவீத மீடிறன் | திரள் மீடிறன் | சதவீத திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 91 - 100 | 913 | 0.89 | 103023 | 100.00 |
| 81 - 90 | 4432 | 4.30 | 102110 | 99.11 |
| 71 - 80 | 9015 | 8.75 | 97678 | 94.81 |
| 61 - 70 | 12877 | 12.50 | 88663 | 86.06 |
| 51 - 60 | 17746 | 17.23 | 75786 | 73.56 |
| 41 - 50 | 18580 | 18.03 | 58040 | 56.34 |
| 31 - 40 | 18829 | 18.28 | 39460 | 38.30 |
| 21 - 30 | 13258 | 12.87 | 20631 | 20.03 |
| 11 - 20 | 6690 | 6.49 | 7373 | 7.16 |
| 01 - 10 | 679 | 0.66 | 683 | 0.66 |
| 00 - 00 | 4 | 0.00 | 4 | 0.00 |

**அட்டவணை 5**

**மேலே தரப்பட்டுள்ள அட்டவணையில் புள்ளி விபரங்களை பெற்றுக்கொள்ளும் முறை பின்வரும் உதாரணத்தினூடாக காட்டப்பட்டுள்ளது.**

உதாரணம் : 31- 40 வகுப்பாயிடை

இப்பாடத்தில் 31- 40 வகுப்பாயிடையில் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட மாணவர் எண்ணிக்கை 18829 ஆவர். அது சதவீத அடிப்படையில் 18.28% ஆகும். புள்ளி 40 வும் அதற்கும் குறைவாக பெற்றுள்ள மாணவர் எண்ணிக்கை 39460 வும் ஆகும். அது சதவீத்தில் 38.30% ஆகும்.

## 1.3 பாட அடைவுகள் தொடர்பான பகுப்பாய்வு

### 1.3.1 I வது வினாப் பத்திரத்தின் அடைவு மட்டம்




வரைபு 1

இது RD/16/05/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.
இவ்வரைபில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறை பின்வரும் உதாரணம் மூலம் காட்டப்பட்டுள்ளது.

உதாரணம் - இங்கு பரீட்சார்த்திகளில் அதிக எண்ணிக்கையானோர் சரியாக விடையளித்துள்ளமை 2ம் வினாவுக்காகும். அதன் சதவீதம் 88% ஆகும். அதே போன்று பரீட்சார்த்திகளில் குறைந்த எண்ணிக்கையானோர் சரியாக விடையளித்துள்ள வினா எண் 32 ஆகும். அதன் சதவீதம் 17% ஆகும்.

☞ = 1, 2, 3, 4 அனைத்து தெரிவிற்கும் புள்ளடியிட்டுள்ளார். விடைக்குப் புள்ளடி இடாதுவிடின் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

### 1.3.2 II ம் - வினாப்பத்திரத்திற்கு வினாக்களைத் தெரிவு செய்துள்ள விதம்




இவ்வரைபிலிருந்து விபரங்களைப் பெற்றுக்கொள்ளும் முறையானது கீழ்க்காணும் உதாரணம் மூலம் காட்டப்பட்டுள்ளது.

உதாரணம் -இங்கு 1 ஆம் வினா கட்டாயமெனினும் சிறு எண்ணிக்கையிலானவர்கள் அதற்கு விடையளிக்கவில்லை. இவ்வினாவுக்கு பதிலளித்துள்ளவர்களின் சதவீதம் 99% ஆகும். குறைந்த எண்ணிக்கையானோர் தெரிவுசெய்துள்ள வினா 6 ஆகும். அவ்வினாவைத் தெரிவு செய்தோர் சதவீதம் 29.5% ஆகும்.

**வரைபு 2** - RD/16/02/OL படிவத்திற்கிணங்க பெற்றுக் கொள்ளப்பட்ட விபரங்களினடிப்படையில் தயாரிக்கப்பட்டது.

### 1.3.3 II ம் வினாப்பத்திரத்திற்காகப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள விதம்




இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறையானது கீழ்க்காணும் உதாரணம் மூலம் காட்டப்பட்டுள்ளது.

உதாரணம் -

இங்கு 01 ஆம் வினாவுக்காக ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகள் 20 ஆகும். இப்புள்ளிகளில் 76 - 100 வகுப்பாயிடையில் அதாவது 16 - 20 வரையில் பெற்றுள்ளவர்களின் வீதம் 12.7% ஆகும். புள்ளி 0%-25% வகுப்பாயிடையில் அதாவது புள்ளி 0 - 5 வரையில் பெற்றுள்ளவர்களின் வீதம் 33.44% ஆகும்.

**வரைபு 3** - RD/16/02/OL படிவத்திற்கிணங்க பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள விபரங்களினடிப்படையில் தயாரிக்கப்பட்டது.

### 1.3.4 II ம் வினாப்பத்திரத்திற்கான அடைவுமட்டம்




**வரைபு** 4.1 இது RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.
இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும்முறை கீழ்வரும் உதாரணம் மூலம் காட்டப்பட்டுள்ளது.
உதாரணம் - 1ம் வினாவில் (i) ம் பகுதியின் இலகுதன்மை 70% ஆவதோடு (vii) ம் பகுதியின் இலகுதன்மை 32% ஆகும்.


க.பொ.த. (சா/த) பரீட்சை - 2016
62 - குடியியற் கல்வி
II ம் வினாப்பத்திரத்தில் 3-7 வரையான வினாக்களில் ஒவ்வொரு பகுதிக்குமான இலகுதன்மைச்சுட்டி
இலகுதன்மைச் சுட்டி
1.0
0.9
0.8
0.7
0.6
0.5
0.4
0.3
0.2
0.1
0.0
(i) (ii) (iii)
3
(i) (ii) (iii)
4
(i) (ii) (iii)
5
(i) (ii) (a) (iii) (b)
6
(i) (ii) (iii)
7
வினாவின் பகுதிகளும் உபபகுதிகளும்

வரைபு 4.2

**பகுதி** II

## 2. வினாக்களும் விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்

### 2.1 I ம் வினாப்பத்திரம் மற்றும் விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான தகவல்கள்

#### 2.1.1 I ம் வினாப்பத்திர அமைப்பு

I ம் வினாப்பத்திரம் மொத்தப்புள்ளிகள் 40

- ⋆ தெரிவுகள் நான்கைக் கொண்ட பல்தேர்வு வினாக்கள் 40 ஐக் கொண்டதாகும். அவ் ஒவ்வொரு வினாவுக்கும் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3) மற்றும் (4) விருப்பத்தெரிவுகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான தெரிவொன்றினை செய்ய எதிர்ப்பார்க்கப்படுகின்றது.
- ⋆ முழுப்பாடத்திட்டமும் உள்ளடங்கும் வகையில் வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
- ⋆ எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- ⋆ முதலாம், இரண்டாம் வினாப்பத்திரங்கள்ஒரே தடவையில் பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படுவதுடன் அவ்வினாப் பத்திரத்திற்கு விடையளிப்பதற்காக மூன்று மணித்தியாலங்கள் வழங்கப்படும்.

## 2.1.2 I ம் வினாப்பத்திரம்

1. கடந்த காலத்தில் நேரடி சனநாயக தத்துவங்களின் அடிப்படையில் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபட்ட அரசு,
   (1) பிரித்தானியா (2) ஏதென்சு (3) சுவிற்சர்லாந்து (4) இந்தியா

2. இலங்கைப் பிரசையொருவருக்கு வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான தகைமையைப் பெறும் வயதெல்லையாகக் கருதுவது அவர்
   (1) 15 வயதைப் பூரணப்படுத்தியிருத்தலாகும். (2) 18 வயதைப் பூரணப்படுத்தியிருத்தலாகும்.
   (3) 21 வயதைப் பூரணப்படுத்தியிருத்தலாகும். (4) 24 வயதைப் பூரணப்படுத்தியிருத்தலாகும்.

3. அரசொன்றின் அடிப்படைப் பண்புகளைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
   (1) நிலப்பரப்பு, சனத்தொகை, அரசாங்கம், சுயாதீனமான அதிகாரம்
   (2) நிலப்பரப்பு, அரசாங்கம், சுயாதீனமான அதிகாரம், எதிர்க்கட்சி
   (3) சனத்தொகை, சுயாதீனமான அதிகாரம், நீதித்துறை, அரசாங்கம்
   (4) சனத்தொகை, அரசாங்கம், சனாதிபதி, நிறைவேற்று அதிகாரம்

4. சனநாயக சமூகமொன்றின் பிரசையொருவரினால் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய இரண்டு வகையான கடமைகள்,
   (1) சிவில் மற்றும் அரசியல் கடமைகள் ஆகும்.
   (2) கலாசார மற்றும் சமயக் கடமைகள் ஆகும்.
   (3) பொருளாதார மற்றும் சமூகக் கடமைகள் ஆகும்.
   (4) சட்ட மற்றும் ஒழுக்க ரீதியான கடமைகள் ஆகும்.

5. சனநாயக சமூகமொன்றில் ஆட்சி தொடர்பான விவகாரங்களை மேற்கொள்வதற்கு மக்களுக்கு இருக்க வேண்டிய அதிகாரம், அறியப்படுவது
   (1) வாக்குரிமை எனவாகும். (2) மீயுயர் அதிகாரம் எனவாகும்.
   (3) இறைமை எனவாகும். (4) அரசியலமைப்பு அதிகாரம் எனவாகும்.

6. மத்திய அரசிடம் உள்ள நிர்வாக அதிகாரத்தைப் பிராந்திய நிர்வாக அலகுகளுக்கு கையளித்தல் என்பது
   (1) அதிகாரத்தைப் பரவலாக்குதலாகும். (2) அதிகாரத்தைப் பகிர்தலாகும்.
   (3) அதிகாரத்தைக் கையளித்தலாகும். (4) அதிகாரத்தை நெறிப்படுத்தலாகும்.

7. கூட்டாட்சி அரசொன்றில் அதிகாரப் பகிர்வு நடைபெறுவது
   (1) சனாதிபதிக்கும் மத்திய அரசுக்கும் இடையிலாகும்.
   (2) சனாதிபதிக்கும் பிராந்திய அரசுகளுக்கும் இடையிலாகும்.
   (3) மத்திய அரசுக்கும் பிராந்திய அரசின் ஆளுனருக்கும் இடையிலாகும்.
   (4) மத்திய அரசுக்கும் பிராந்திய அரசுகளுக்கும் இடையிலாகும்.

8. 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி மாகாண சபையொன்றின் அமைச்சரவையானது முதலமைச்சர் உட்பட
   (1) நான்கு பேர்களைக் கொண்டது. (2) ஐந்து பேர்களைக் கொண்டது.
   (3) ஆறு பேர்களைக் கொண்டது. (4) ஏழு பேர்களைக் கொண்டது.

9. சுவிற்சர்லாந்து அரசியல் முறைமையில் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் போது பிரச்சினையான நிலைமை உருவாகுமாயின் அதனைத் தீர்க்கும் அதிகாரம் இருப்பது
   (1) தேசிய சபைக்காகும். (2) கன்ரன் நீதிமன்றத்திற்காகும்.
   (3) கூட்டாட்சி மகா சபைக்காகும். (4) கூட்டாட்சி சபைக்காகும்.

10. பல்கலாச்சார சமூகமொன்றில் நல்லாட்சியின் காரணமாக ஏற்படும் முக்கியமான விளைவு,
    (1) ஒருவரை ஒருவர் மதிக்கப் பழகுதல்.
    (2) பல அரச கரும மொழிகளைப் பயன்படுத்த முடிதல்.
    (3) பல்வேறு கலாசாரங்கள் பற்றிய விழிப்புணர்வைப் பெறமுடிதல்.
    (4) பல்வேறு இனப் பிரிவுகள் மற்றும் சமூகங்களுக்கிடையே பரஸ்பர நம்பிக்கையை உறுதிசெய்தல்.

11. மனித தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முற்படும் போது பிரச்சினைகள் தோன்றுவதற்கு முக்கிய காரணமாக அமைவது,
    (1) தேவைகளை நிறைவேற்றுவதற்கான வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருத்தலாகும்.
    (2) நபருக்கு நபர் தேவைகள் வேறுபடுதல்.
    (3) தேவைகளை நிறைவேற்றுவதற்கான அறிவு போதுமானதாக இல்லாதிருத்தல்.
    (4) தேவைகளை நிறைவேற்றுவதற்கான வசதிகள் போதுமானதாக இல்லாதிருத்தல்.

12. பொருளாதாரம் அல்லாத பண்டமொன்றையும் பொருளாதாரப் பண்டமொன்றையும் ஒழுங்குமுறையில் காட்டும் சரியான விடை எது?
    (1) நீரும் உணவும் (2) நீரும் வளியும்
    (3) மருந்துகளும் சூரிய ஒளியும் (4) உடையும் உணவும்

**13.** பொருளாதாரச் செயன்முறை ஒன்றினை வரிசை ஒழுங்கில் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
(1) உற்பத்தி, நுகர்வு, விநியோகம் (2) உற்பத்தி, விநியோகம், நுகர்வு
(3) உற்பத்தி, களஞ்சியப்படுத்தல், விநியோகம் (4) உற்பத்தி, களஞ்சியப்படுத்தல், நுகர்வு

**14.** நபரினுள், நபர்களுக்கிடையே, குடும்பத்தினுள், குடும்பங்களுக்கிடையே ஏற்படும் மோதல்கள் அறியப்படுவது
(1) சர்வ மோதல்கள் எனவாகும். (2) குடும்ப மோதல் எனவாகும்.
(3) சிக்கலான மோதல்கள் எனவாகும். (4) நபர்களுக்கிடையிலான மோதல் எனவாகும்.

**15.** மோதல்களைத் தவிர்ப்பதற்காக ஒரு பிரசையினால் வளர்த்துக் கொள்ள வேண்டிய நபர் சார்ந்த குணவியல்புகளை உள்ளடங்கும் விடையைத் தெரிவு செய்க.
(1) மற்றவர்களுக்கு மதிப்பளித்தல், ஏனையோரின் கருத்துக்களை மதித்தல், நியாயத் தன்மை
(2) தாங்கும் சக்தி, ஈகை, சமனான அனுபவம்
(3) பயனுறுதியுள்ள தொடர்பாடல், ஆக்கபூர்வ சிந்தனை, செவிமடுத்தல்
(4) ஆத்ம விளக்கம், பொறுமை, சகிப்புத் தன்மை

**16.** சட்டத்தின் பிரதான குறிக்கோள்
(1) மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் நிர்வாகத்தை முன்னெடுக்க வழிகாட்டுதல்
(2) மக்களினது உயிர், சொத்துக்கள் மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மனித நடத்தைகளைக் கட்டுப்படுத்தல்
(3) மக்கள் மத்தியில் சட்டம் தொடர்பான அறிவை உறுதி செய்தல்
(4) சமூகத்தில் தவறிழைப்பவர்கள் அனைவரையும் நீதிமன்றத்தின் முன் நிறுத்துதல்

**17.** இலங்கையில் இறுதியானதும் மிக உயர்ந்த நீதிமன்றமாகவும் செயற்படுவது,
(1) உயர் நீதிமன்றம் (2) மேன் முறையீட்டு நீதிமன்றம்
(3) மேல் நீதிமன்றம் (4) யுத்த நீதிமன்றம்

**18.** கொலைகள் தொடர்பான வழக்குளை விசாரிக்கும் அதிகாரம் உள்ள நீதிமன்றமாவது,
(1) மேன் முறையீட்டு நீதிமன்றம் (2) மாகாண உயர் நீதிமன்றம்
(3) மாவட்ட நீதிமன்றம் (4) உயர் நீதிமன்றம்

**19.** மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு அத்தண்டனையை நிறைவேற்றுமாறு தேவையான சிபாரிசுகளை சனாதிபதிக்கு வழங்குவது
(1) சட்டமா அதிபரினாலாகும். (2) பிரதம நீதியரசரினாலாகும்.
(3) சொலிஸ்டர் ஜெனரலினாலாகும். (4) நீதி அமைச்சரினாலாகும்.

**20.** 1931 ஆம் ஆண்டில் நடைபெற்ற டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனம் பின்வருவனவற்றில் எது?
(1) அரசியலமைப்புச் சபை (2) அரச சபை
(3) தேசிய அரச சபை (4) பாராளுமன்றம்

**21.** 1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் மூலம் ஏற்படுத்தப்பட்ட பிரதான அரசியலமைப்பு மாற்றம்
(1) விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை அறிமுகம் செய்யப்பட்டமையாகும்.
(2) சர்வசன வாக்கெடுப்பு முறைமை அறிமுகஞ் செய்யப்பட்டமையாகும்.
(3) நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதி பதவியை ஏற்படுத்தியமையாகும்.
(4) மாகாண சபை முறையை அறிமுகஞ் செய்தமையாகும்

**22.** 19 ஆவது அரசியல் சீர்திருத்தத்தின்படி சனாதிபதியினால் பாராளுமன்றத்தைக் கலைக்க முடிவது,
(1) பாராளுமன்றத்தின் பதவிக்காலம் குறைந்தபட்சம் ஒரு வருடம் முடிவடைந்த பின்னராகும்
(2) பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டும் என பிரதமர் கோரிக்கை விடுக்கும் போதாகும்
(3) சனாதிபதியின் விருப்பின்படி எந்த ஒரு சந்தர்ப்பத்திலாகும்.
(4) பாராளுமன்றம் உருவாகி $4\frac{1}{2}$ ஆண்டுகள் பதவிக்காலம் முடிவடைந்த பின்னராகும்

**23.** இலங்கையின் உள்ளூராட்சி நிறுவகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளில் பொதுப் பயன்பாட்டுச் சேவைகளில் **அடங்காத** பணியொன்றாவது,
(1) பொது இடங்களுக்கு மின்சாரம் வழங்கலாகும்
(2) மக்கள் சந்தைகளை நிர்வகித்தல்.
(3) பொது மலசல கூடங்களை நிறுவுதலும் பராமரித்தலும்
(4) பொது வாசிப்பு நிலையங்களை நிருவகித்தல்

**24.** மனிதனின் தலையீட்டினால் கட்டியெழுப்பட்டுள்ள சமயங்கள், பேதங்கள், உரிமைகள், மரபுரிமைகள், பழக்கவழக்கங்கள், கடமைகள், சட்டரீதியான சம்பிரதாயங்கள் போன்ற அம்சங்கள் உள்ளடங்கும் சுற்றாடல் பின்வரும் எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?
(1) சமூகச் சுற்றாடல் (2) இயற்கைச் சுற்றாடல்
(3) உயிரினச் சுற்றாடல் (4) மனிதச் சுற்றாடல்

25. A - கணினி எழுத்தறிவு
B - மெய்நிகர் மொத்த தேசிய உற்பத்தி
C - பசுமை மொத்த உள்நாட்டு உற்பத்தி
D - பொருளாதார வளர்ச்சி வீதம்
E - பௌதிக வாழ்க்கைத்தரச் சுட்டி

அபிவிருத்தியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகுதி விதிகளில் மரபுரீதியான (பாரம்பரிய) தகுதி விதிகளை மட்டும் உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.

(1) A யும் B யும் (2) B யும் C யும்
(3) B யும் D யும் (4) D யும் E யும்

26. சுற்றடலுடன் தொடர்பான பிரசைகளின் பொறுப்பாக அமைவது,
(1) அபிவிருத்திச் செயற்பாடுகளின் போது சூழல் கிரயத்தைக் கணிப்பிடல்
(2) அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் சூழல் நேயமான பிரசைகளை உருவாக்குதல்
(3) எப்போதும் சூழல்நேயமான வாழ்க்கை முறையொன்றைப் பின்பற்றுதல்
(4) சுற்றாடலுடன் தொடர்புடைய நீதி சட்டகத்திற்கு ஏற்புடையதாக செயற்பட பிரசைகளின் மனப்பாங்குகளை அபிவிருத்தி செய்தல்

27. அபிவிருத்தி அடைந்த நாடுகளின் இரண்டு இயல்புகளை உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.
(1) நகரக் குடித்தொகை குறைவாக இருப்பதுடன் சிசு மரண வீதமும் குறைவாகும்
(2) ஆயுட்கால எதிர்பார்ப்பு உயர் மட்டத்தில் உள்ளதுடன் குடித்தொகையின் வளர்ச்சி வீதமும் அதிகமாகும்
(3) பௌதிக வாழ்க்கை தரச் சுட்டி உயர்வாகவும் வெளிநாட்டுச் செலவாணி வருமானங்கள் குறைவாகவும் காணப்படும்.
(4) மனித அபிவிருத்தி சுட்டி உயர்வாக இருந்த போதிலும் குடித்தொகை வளர்ச்சி வீதம் குறைவானது.

28. இலங்கையில் மனித உரிமைகளின் அமுலாக்கம் தொடர்பாகப் பின்வரும் கூற்றுக்களில் **தவறான** கூற்றைத் தெரிவு செய்க.
(1) ஏதேனும் நிறைவேற்று அல்லது நிருவாக செயலின் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்படுமாயின் உயர் நிதிமன்றத்திற்கு முறைப்பாடு செய்து நியாயமான தீர்வைப் பெற சகல மக்களுக்கும் முடியும்.
(2) அடிப்படை உரிமை மீறல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்துப் பொருத்தமான சிபாரிசுகளைச் செய்யும் அதிகாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு உள்ளது.
(3) எந்த ஒரு பிரசைக்கும் மனித உரிமைகள் மீறல் தொடர்பான செயற்பாட்டின் போது வழங்கப்பட்ட தீர்ப்பு திருப்தியை ஏற்படுத்தாதிருக்குமாயின் ஐக்கிய நாடுகளின் மனித உரிகைள் ஆணைக்குழுவிற்கு முறைபாட்டைச் செய்ய முடியும்.
(4) அரசாங்க அல்லது உள்ளூராட்சி நிறுவகத்தின் உத்தியோகத்தர் ஒருவரினால் மனித உரிமை மீறல் பற்றிய முறைபாட்டை விசாரித்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் நிருவாக செயற்பாடுகள் பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்ஸ்மன்) உள்ளது.

29. நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி தொடர்பாக பிரசைகளின் கடமையாகக் கருதப்படக்கூடியது பின்வருவனவற்றுள் எதுவாகும்?
(1) மிகை நுகர்வைத் தவிர்த்தல்
(2) சூழல் நேயமான பொருட்கள் மற்றும் சேவை வழங்குனர்களை ஊக்குவித்தல்
(3) சுற்றாடல் தொடர்பான நியமங்களை அறிமுகம் செய்தல்
(4) சுற்றாடல் மீதான தாக்கங்களை மதிப்பிடல்

30. ஒரு நாட்டின் வெளிநாட்டு தேறிய காரணி வருமானத்தைக் கவனத்திற் கொண்ட பின்னர் வருடமொன்றில் உற்பத்தி செய்யப்படுகின்ற, சகல பண்டங்கள் மற்றும் சேவைகளின் மொத்த பெறுமானம் என்ன பெயரால் அழைக்கப்படும்?
(1) மெய்நிகர் மொத்த தேசிய உற்பத்தி (2) நிதிசார் மொத்த தேசிய உற்பத்தி
(3) மொத்த தேசிய உற்பத்தி (4) பசுமை உள்நாட்டு உற்பத்தி

31. இயற்கைச் சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற இயற்கையான காரணங்கள் இரண்டினை உள்ளடக்கியுள்ள விடையைத் தெரிவு செய்க.
(1) பாலைவனமாதல், உவர்த்தன்மை
(2) சூறாவளிகள், சுனாமி
(3) பனியாறுகள் உருகுதல், சமுத்திர நீர் மட்டம் உயர்வடைதல்
(4) பூகோளம் வெப்பமடைதல், அமில மழையின் வீழ்ச்சி

32. சுற்றாடல் அழிவடைவதற்கான பிரதான காரணமாகக் கருதப்படுவது மக்களினது
(1) வறுமை நிலையாகும் (2) கல்வி இன்மை
(3) அறியாமையாகும் (4) தவறான மனப்பாங்குகளாகும்

**33.** சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் உள்ளடங்கும் பிரதான சட்ட ஆவணங்களின் எண்ணிக்கை
(1) 6 ஆகும். (2) 5 ஆகும். (3) 4 ஆகும். (4) 3 ஆகும்.

**34.** யுத்த நோக்கங்களுடன் உருவாக்கப்பட்ட பிராந்திய ஸ்தாபனத்திற்கான ஒரு உதாரணம்
(1) ஆசியான் (ASEAN) ஆகும். (2) நேட்டோ (NATO) ஆகும்.
(3) சார்க் (SAARC) ஆகும். (4) பிம்ஸ்ரெக் (BIMSTEC) ஆகும்.

**35.** குறித்தவொரு நாடொன்று இராஜதந்திர தொடர்புகளைக் கட்டியெழுப்புதில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய மிக முக்கிய காரணியாவது அந்நாட்டின்,
(1) புவியியல் நிலைமை (2) அரசியல் ஸ்திரத்தன்மை
(3) வெளிநாட்டுக் கொள்கை (4) பொருளாதாரக் கொள்கை

**36.** சர்வதேச தொடர்புகளின் தற்கால நிலையை நோக்கும் போது காணக்கூடிய பிரதான பண்பு
(1) சர்வதேச பயங்கரவாதத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகும்
(2) பல்தேசியக் கம்பனிகள் பலவீனமான நாடுகளின் வளங்களை சூறையாடுவதாகும்
(3) பலமிக்க அரசுகள் தமது அதிகாரத்தை வலுப்படுத்த முயற்சித்தலாகும்
(4) பலமிக்க அரசுகள் பலவீனமான நாடுகளின் மீது பல்வேறு வகையான செல்வாக்குகளைச் செலுத்துதலாகும்

**37.** பின்வரும் எந்த அமைப்பின் அங்கத்துவ நாடுகளுக்கிடையில் 'சப்தா' (SAPTA) மற்றும் 'சப்தா' (SAFTA) வர்த்தக ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டன?
(1) ஆசியான் (2) பிம்ஸ்ரெக்
(3) ஐரோப்பிய ஒன்றியம் (4) சார்க்

**38.** அபிவிருத்தியடைந்த நாடுகளைப் போன்று அபிவிருத்தியடையும் நாடுகளும் பொதுவாக முகங்கொடுக்கும் பிரச்சினையொன்று
(1) சாதகமற்ற சென்மதி நிலுவை காணப்படுதல்
(2) அரசியல் ஸ்திரத்தன்மையற்று இருத்தல்
(3) சர்வதேச பயங்கரவாதிகளின் தாக்கம்
(4) உள்ளூர் செல்வங்களின் (வளங்களின்) உரித்துரிமை வெளிநாட்டவரிடம் காணப்படல்

**39.** நாடுகளுக்கிடையிலே சமாதான இராஜதந்திரத் தொடர்புகளைப் பேணும் பிரதான ஊடகமாவது
(1) தூதுவர் சேவையாகும் (2) பாதுகாப்பு அமைச்சாகும்
(3) சனாதிபதி அலுவலகமாகும் (4) வெறிநாட்டு அலுவல்கள் அமைச்சாகும்

**40.** மேலேயுள்ள **நிரல் I** ஆனது ஐக்கிய நாடுகளின் முக்கிய நிறுவனங்கள் மூன்றினையும் **நிரல் II** ஆனது அவற்றிற்குரிய அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் சிலவற்றையும் காட்டுகிறது.

| **நிரல் I** | | **நிரல் II** |
|---|---|---|
| 1 | பொதுச் சபை | A ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானப் படையைக் கட்டுப்படுத்தல் |
| 2 | பாதுகாப்புச் சபை | B ஆயுதங்களை கட்டுப்படுத்துவதற்கான திட்டங்களை அமுலாக்குதல் |
| 3 | ஐக்கிய நாடுகள் செயலகம் | C ஆயுதத் தவிர்ப்பு, ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பான கொள்கைகளைப் பரிசீலித்தலும் சிபாரிசுகளைச் செய்தலும் |
| | | D மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் |

**நிரல் I** இன் ஒழுங்குமுறை வரிசையில் பொருந்தும் வகையில் **நிரல் II** ஐ ஒழுங்குபடுத்தும் போது பெறப்படும் சரியான விடை எது?
(1) A, B, C (2) B, A, D (3) C, B, A (4) D, C, B

* *

2.1.3. 1 வினாப்பத்திரத்திற்காக எதிர்பார்க்கப்படும் விடைகளும் புள்ளித் திட்டமும்

| வினா இல | விடை | வினா இல | விடை |
|---|---|---|---|
| 01. | 2 | 21. | 3 |
| 02. | 2 | 22. | 4 |
| 03. | 1 | 23. | 3 |
| 04. | 4 | 24. | 1 |
| 05. | 3 | 25. | 3 |
| 06. | 1 | 26. | 3 |
| 07. | 4 | 27. | 4 |
| 08. | 2 | 28. | 4 |
| 09. | 3 | 29. | 1 |
| 10. | 4 | 30. | 3 |
| 11. | 1 | 31. | 2 |
| 12. | 1 | 32. | 1 |
| 13. | 2 | 33. | 1 |
| 14. | 3 | 34. | 2 |
| 15. | 4 | 35. | 3 |
| 16. | 2 | 36. | 4 |
| 17. | 3 | 37. | 4 |
| 18. | 1, 2, 3, 4 | 38. | 3 |
| 19. | 1 | 39. | 1 |
| 20. | 2 | 40. | 3 |

சரியான ஒவ்வொரு விடைக்கும் ஒரு (01) புள்ளி வீதம் மொத்தம் 40 புள்ளிகள்.

## 2.1.4. I ம் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்பு (வினாக்களின் அடிப்படையில்)




1 ம் பத்திரத்தில் 1, 2, 3, 12 மற்றும் 17 ஆவது வினாக்களுக்காக 77% , 88% , 80% , 73% மற்றும் 75% என பரீட்சார்த்திகளில்75%இற்கு அதிகமானோர் சரியாக விடையளித்துள்ளனர். அதே போன்று இங்கு 9,14,23,27,32 மற்றும் 40 ஆவது வினாக்களுக்கு முறையே 24%, 20%, 24%, 20%, 17% மற்றும் 22% என விடையளிக்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் 24%இற்கும் அல்லது அதற்கும் குறைவானோர்களேயாவர்.

| | |
|---|---|
| இலகுதன்மை கூடிய வினா<br>அதன் சதவீதம் | 02<br>88% |
| இலகுதன்மை குறைந்த வினா<br>அதன் சதவீதம் | 32<br>17% |

* = 1,2,3,4 தெரிவு நான்கிற்கும் புள்ளி வழங்கப்பட்டுள்ளது. விடைகளுக்கு புள்ளடி இடவில்லையெனில் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**2.1.5** I - வினா பத்திரத்தில் ஒவ்வொரு வினாவுக்குமான விருப்பத்தெரிவினை தெரிவுசெய்த விதம் சதவீதத்தில்

| வினா எண் | சரியான தெரிவு | ஒவ்வொரு தெரிவினையும் தெரிவு செய்த மாணவர் சதவீதம் | | | | பதிலளிக்காதவர்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | |
| 1 | 2 | 11.7% | 77.2% | 7.7% | 3.3% | 0.1% |
| 2 | 2 | 1.00% | 88.1% | 9.9% | 1.1% | - |
| 3 | 1 | 80.4% | 2.7% | 8.9% | 7.9% | 0.1% |
| 4 | 4 | 7.7% | 10.9% | 12.3% | 68.9% | 0.2% |
| 5 | 3 | 32.5% | 8.3% | 54.5% | 4.3% | 0.4% |
| 6 | 1 | 67.8% | 19.1% | 10.5% | 2.3% | 0.3% |
| 7 | 4 | 16.7% | 12.3% | 10.9% | 59.8% | 0.3% |
| 8 | 2 | 23.3% | 38.5% | 24.3% | 13.6% | 0.4% |
| 9 | 4 | 9.9% | 54.4% | 24.4% | 10.9% | 0.3% |
| 10 | 4 | 21.1% | 7.0% | 13.5% | 58.0% | 0.4% |
| 11 | 1 | 33.9% | 41.5% | 6.3% | 18.1% | 0.1% |
| 12 | 1 | 72.7% | 8.8% | 11.3% | 7.1% | 0.1% |
| 13 | 2 | 9.3% | 68.9% | 16.9% | 4.7% | 0.2% |
| 14 | 3 | 23.2% | 11.2% | 20.4% | 45.2% | - |
| 15 | 4 | 35.9% | 6.3% | 19.7% | 37.9% | 0.3% |
| 16 | 2 | 16.0% | 64.5% | 9.1% | 10.3% | 0.1% |
| 17 | 1 | 14.3% | 7.8% | 75.1% | 2.7% | 0.1% |
| 18 | 1, 2, 3, 4 | 19.8% | 9.6% | 14.2% | 56.2% | 0.2% |
| 19 | 1 | 48.9% | 26.9% | 12.2% | 11.9% | 0.2% |
| 20 | 2 | 15.9% | 53.3% | 18.5% | 12.0% | 0.3% |
| 21 | 3 | 16.9% | 18.0% | 51.5% | 13.5% | 0.3% |
| 22 | 4 | 25.4% | 16.3% | 25.1% | 33.0% | 0.2% |
| 23 | 3 | 16.5% | 33.3% | 24.1% | 25.7% | 0.3% |
| 24 | 1 | 66.8% | 4.7% | 5.6% | 22.7% | 0.2% |
| 25 | 3 | 3.5% | 38.9% | 32.3% | 25.1% | 0.2% |
| 26 | 3 | 3.5% | 9.0% | 62.0% | 25.5% | 0.5% |
| 27 | 4 | 12.2% | 51.3% | 16.7% | 19.5% | 0.3% |
| 28 | 4 | 21.5% | 14.0% | 25.3% | 38.7% | 0.5% |
| 29 | 1 | 40.1% | 46.1% | 6.8% | 6.7% | 0.3% |
| 30 | 3 | 19.3% | 29.1% | 46.4% | 4.9% | 0.3% |
| 31 | 2 | 7.3% | 57.8% | 8.1% | 26.6% | 0.2% |
| 32 | 1 | 16.9% | 9.9% | 27.2% | 45.7% | 0.3% |
| 33 | 1 | 32.3% | 26.7% | 20.5% | 20.1% | 0.5% |
| 34 | 2 | 10.8% | 52.1% | 25.3% | 11.7% | 0.2% |
| 35 | 3 | 14.6% | 33.3% | 28.6% | 23.4% | 0.1% |
| 36 | 4 | 8.9% | 17.9% | 27.5% | 45.5% | 0.1% |
| 37 | 4 | 20.7% | 15.0% | 26.7% | 37.7% | - |
| 38 | 3 | 19.2% | 21.4% | 41.9% | 17.3% | 0.2% |
| 39 | 1 | 47.9% | 15.0% | 11.5% | 25.6% | - |
| 40 | 3 | 12.9% | 27.2% | 22.1% | 37.4% | 0.3% |

ஒவ்வொரு வினாவுக்கு கீழும் சரியான தெரிவினை தெரிவுசெய்த மாணவர் சதவீதம் கருப்பு நிறத்தில் காட்டப்பட்டுள்ளது

## 2.1.6 I ம் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான முழுமையான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் :

I ம் வினா பத்திரத்தில் இலகுதன்மை 60% இற்கும் கூடிய வினாக்களின் எண்ணிக்கை 12 ஆகும். இவ்வினாக்களுள் 2, 3, 17 வது வினாக்களின் இலகுதன்மை 75% இனை அண்மித்துள்ளது. அவற்றுள் கூடிய இலகுதன்மையை 2 ம் 3 ம் வினாக்கள் காட்டியுள்ளது. இவ்விலகு தன்மைக்கு ஏதுவான காரணம் யாதெனில் இவ்வினாக்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் நடைமுறை உலகில் தினமும் பேசப்படுவதோடு, பாடப்புத்தகத்திலும் அவ்விடயங்கள் விசேடமாக குறிப்படப்பட்டுள்ளமையே ஆகும்.

இங்கு குறைந்த இலகுதன்மையைக் காட்டியுள்ளது 32 வது வினாவாகும். இதில் சூழல் மாசடைதல் பற்றி வினவப்பட்டுள்ளது. இதற்காக சரியான விடையை தெரிவு செய்த மாணவர் வீதம் 17% ஆகும். இவ்வினாவுக்காக வழங்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளில் அதிகளவானோர் நான்காம் தெரிவினை தெரிவு செய்துள்ளனர். சூழல் தொடர்பான சரியான தெளிவின்மையே இதற்கான காரணமாக அமைந்திருக்கலாம். அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்காக பாடப்புத்தகப் பாவனையைத் தூண்டுதல், பயிற்சிகளைச் செய்வித்தல் போன்றே வெளிவாரியான ஊடகங்களினூடாகவும் அறிவை உறுதிப்படுத்துவதற்கு மாணவர்களைத் தூண்டுதல் வேண்டும் என ஆலோசனை வழங்கலாம்.

Iம் வினா பத்திரத்தில் 9, 11, 14, 22, 23, 25, 27, 35, 40 ஆவது வினாக்களின் இலகுதன்மை முறையே 25%, 34%, 20%, 33%, 24%, 33%, 19%, 29% மற்றும் 22% ஆகும். இவ்வாறு இலகுதன்மை குறைவடைவதற்கு பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்தியுள்ளதோடு கீழ் குறிப்பிடப்படும் காரணம் விசேடமானதாகும்.

அவற்றுள் ஒரு சில வினாக்களுக்காக முன்வைக்கப்பட்டுள்ள கருதுகோள்கள் மாணவர்களுக்கு தொலைவானதாக காட்டப்பட்டுள்ளதுடன், வழங்கப்பட்டுள்ள விடைகளுள் சரியான விடையினை விசேடத்துவமான வகையில் தெரிவு செய்வதில் காட்டியுள்ள பலவீனத்திற்கு, தொடர்ச்சியான பயிற்சிகளில் ஈடுபடச் செய்வதற்குத் தவறியுள்ளமை போன்றவற்றை எடுத்துக் காட்டலாம்.
அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்காக நாளாந்த தகவல்கள் மீது மாணவர்களின் கவனத்தைச் செலுத்துவதற்கு தூண்டுவதோடு, பயற்சிகள் முற்சோதனைகளுக்காக இவ்வாறான வினாக்களை உள்ளடக்கிய வகையில் வழங்குவது பொருத்தமானதாகும்.

வினா எண் 25, 27 வினாக்களுக்காக பிரயோகிக்கப்பட்ட "அபிவிருத்தி" தொடர்பான எண்ணக்கருவினை மிகத்தெளிவாக வலியுறுத்தும் வகையிலான கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கைத் திட்டமிடுவது அவசியமாகும்.

விடயங்களை நினைவில் வைத்துக்கொள்வதற்கு இடர்படுதல், விசேட காரணிகள் மீது கவனம் செலுத்தாமை, சரியான வகையில் வினாக்களை விளங்கிக்கொள்ளாமை, எண்ணக்கருக்கள் மற்றும் சொற்களுக்கான நேர்பொருளை விளங்கிக்கொள்வதில் இடர்படுதல் போன்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ள மாணவர்களை உட்படுத்துவதனூடாக உயர்வான அடைவு மட்டத்தை எதிர்பார்க்கலாம்.

முக்கியமான எண்ணக்கருக்களை அறிக்கைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்தல் மற்றும் நாளாந்தம் குறுவினாக்கள் / விடைகள் முதலியன உள்ளடங்களாக வினாவிடை வேலைத்திட்டம் ஒன்றை, செயற்படுத்துவதனூடாக பாட விடயங்களை மேலும் வலியுறுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் முதலாம் வினா பத்திரத்திற்கான பாட அடைவு மட்டத்தை அதிகரித்துக் கொள்ள முடியும்.

## 2.2 II ம் வினாப் பத்திரமும் விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரமும்

### 2.2.1 II ம் வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு

II ம் வினாத்தாள் - I ம் மற்றும் II ம் வினாப்பத்திரத்திற்கான முழுமையான காலம் மூன்று மணித்தியாலங்களாகும். மொத்தப் புள்ளிகள் 60 ஆகும். II ம் வினாப்பத்திரத்தின் முதலாம் வினா கட்டாயமானதோடு குறுவிடைகளை வழங்கும் 10 வினாக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஒரு விடைக்குரிய புள்ளி 02 வீதம் மொத்தம் 20 புள்ளிகள் ஆகும். எஞ்சிய கட்டமைப்பு வினாக்கள் 6 இல் 4 இற்கு விடையளிக்கப்பட வேண்டும். ஒரு விடைக்கு 10 புள்ளிகள் வீதம் மொத்தம் 40 புள்ளிகளாகும்.

| | | | |
|---|---|---|---|
| இறுதிப் புள்ளியைக் கணக்கிடுதல் : | I - பத்திரம் | = | 40 |
| | II - பத்திரம் | = | 60 |
| | இறுதிப் புள்ளி | = | 100 |

2.2.2 II ம் வினாப்பத்திரத்தின் வினாத் தெரிவும் இலகுதன்மை சுட்டியும்



**2.2.3 II ம் வினாப் பத்திரத்திற்கு எதிர்பார்க்கப்படும் பதில்களும் புள்ளியிடும் முறைகளும் விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகளும்**

⋆ **II ம் - வினாப்பத்திரத்தில் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை மற்றும் புள்ளிகள் வழங்கும் விதம்.**

| |
|---|
| (01) எதிர்பார்ப்பு : பன்மைக் கலாசார சமூகம், சட்டமும் ஒழுங்கும் அரசு, பொருளாதாரமுறைகள், மனித உரிமைகள் போன்றவற்றைப் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் பரிசீலித்தல். |

**A** - பகுதி கட்டமைப்பு

**வினா இலக்கம் 1**

**1.** (i) சனநாயகம் பற்றிய வரைவிலக்கணங்களை முன்வைத்த பிரபல நபர்கள் **இருவரைப்** பெயரிடுக.

(ii) அரசொன்றுக்கு பொறுப்பளிக்கப்படும் **இரண்டு** பணிகளை எழுதுக.

(iii) கூட்டாட்சியொன்றின் அம்சங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iv) நல்லாட்சியின் அடிப்படை அம்சங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(v) பண்டங்களின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் பிரதான நுட்பமுறைகள் **இரண்டைப்** பெயரிடுக.

(vi) ஜோன் கல்ரூனின் முக்கோண மாதிரியில் காட்டப்பட்டுள்ள மோதல் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்துகின்ற அடிப்படைக் காரணிகள் மூன்றில் **இரண்டைப்** பெயரிடுக.

(vii) நீதவான் நீதிமன்றத்தினால் விசாரனை செய்யக் கூடிய **இரண்டு** வகை வழக்குகளைப் பெயரிடுக.

(viii) 1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு யாப்பின் கீழ் சட்டத்துறையின் (பாராளுமன்றம்) பிரதான அதிகாரங்கள் மற்றும் பணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ix) இலங்கை அரசாங்கம் பெண்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக எடுத்துள்ள படிமுறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(x) சமூக சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படுவதனால் உருவாகும் **இரண்டு** விளைவுகளை பெயரிடுக.

(02 × 10 = 20 புள்ளிகள்)

01 (i) ஜனநாயகம் பற்றிய வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ள நபர்கள்

- ★ ஆபிரகாம்லிங்கன்
- ★ சீலர்
- ★ ஜே. ஆர். லவல்

**இரண்டைக் குறிப்பிடுவதற்கு 02 புள்ளிகள்**

(ii) அரசொன்றுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகள்

- ★ சட்டம், மற்றும் சமாதானத்தைப் பாதுகாத்தல்.
- ★ சமூக நலச் சேவைகளை வழங்குதல்.
- ★ வறுமையை ஒழிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.
- ★ பொதுச் சேவைகளை நடாத்திச் செல்லல்.
- ★ அபிவிருத்திச் செயற்றிட்டங்களைச் செயற்படுத்தல்.
- ★ போர், வன்முறைகள், இன முரண்பாடுகளைக் களைதல்.
- ★ அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாத்தல்.

**இரண்டைக் குறிப்பிடுவதற்கு 02 புள்ளிகள்**

(iii) ஒற்றையாட்சி அரசொன்றின் பண்புகள்
- ★ அரசாங்கத்தின் சட்ட, நிறைவேற்று மற்றும் நீதித்துறை அதிகாரங்கள் மத்தியரசினால் மட்டும் நடைமுறைப்படுத்தப்படல்.
- ★ மத்தியரசின் நிருவாக அலுவல்களை இலகுபடுத்தும் முகமாக நிருவாக அதிகாரங்கள் மட்டும் பிரதேச ஆட்சியாளருக்குப் பரவலாக்கப்பட்டிருத்தல்.
- ★ மத்தியரசாங்கத்தின் சட்டத்துறையினால் நிறைவேற்றப்படும் சட்டத்தின் மூலம் மட்டுமே நிருவாக அதிகாரங்களைப் பரவலாக்குதல்.
- ★ மத்தியரசுக்கு அவசியமான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரவலாக்கப்பட்ட நிருவாக அதிகாரங்களை மீள்பெறல்.
- ★ மத்தியரசின் மீயுயர்தன்மை.
- ★ மேலதிக இறைமைமிக்க நிறுவனங்கள் அரசமைப்பில் காணப்படாமை.

**இரண்டுக்கு 02 புள்ளிகள்**

(iv) நல்லாட்சியின் அடிப்படைகள்
- ★ ஊழல்களற்ற, முறைகேடுகளற்ற ஆட்சியும் நிர்வாகமும்.
- ★ சுதந்திரமும், சமூக நீதியும் நிலை நாட்டப்படல்.
- ★ சட்டத்தின் ஆட்சிக்கு மதிப்பளித்தலும் நீதித்துறையின் சுதந்திரம் பாதுகாக்கப்படலும்.
- ★ ஆட்சியதிகாரங்களை நடைமுறைப்படுத்துவோர் மக்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்கும் கடமைப்பட்டடிருத்தல்.
- ★ உரிமைகள் பாதுகாக்கப்படலும், உறுதி செய்யப்படலும்.
- ★ ஊடக சுதந்திரத்தைப் பாதுகாத்தல்.
- ★ வளங்களை வினைத்திறனான வகையில் பயன்படுத்தல்.
- ★ வெளிப்படைத் தன்மையான வகையில் செயற்படல்.
- ★ பண்புத்தரம் வாய்ந்த அரசியல் சமுதாயப்படுத்தலுக்கு அவசியமான பின்னணியை உருவாக்குதல்.
- ★ அரசியல் யாப்புச் சட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி நிர்வாகம் இடம்பெறுவதை பாதுகாத்தலும் உறுதிசெய்தலும்.

**இரண்டுக்கு 02 புள்ளிகள்**

(v) பண்டங்களை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தும் பிரதான நுட்பங்கள்
- ★ முதலீட்டு நுட்பம்
- ★ உழைப்பு நுட்பம்

**இரண்டுக்கு 02 புள்ளிகள்**

(vi) கல்துங் அவர்களின் முக்கோணத்தில் கிளர்ச்சி மோதல் மாதிரியில் மோதலேற்படுவதற்கான பிரதான காரணிகள்
- ★ நடத்தை
- ★ சூழ்நிலை
- ★ மனப்பாங்கு

**இரண்டுக்கு 02 புள்ளிகள்**

(vii) மாவட்ட நீதிமன்றத்தினால் விசாரணை செய்யப்படக்கூடிய வழக்குகள் இரண்டு
- ★ பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பான குற்றச்செயல்கள்.
- ★ விமானப்படை, கடற்படை, இராணுவம் தொடர்பான குற்றங்கள்.
- ★ அரச ஊழியர் தொடர்பான குற்றங்கள்.
- ★ இல்லத்து வன்முறைகள் மற்றும் உரிய பாதுகாப்பு கட்டளை மனுக்கள்.
- ★ தேர்தல் தொடர்பான குற்றங்கள்.
- ★ பொய்ச்சாட்சியமளித்தல், பொதுமக்களின் ஒழுங்கிற்கு எதிரான குற்றங்கள்.
- ★ பாராளுமன்ற சட்டங்கள் மூலம் இனங்காட்டப்பட்டுள்ள குற்றச்செயல்கள்.
  (வனப்பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்.
  நறுமணப் பொருள்கள் மற்றும் ஔடதங்கள் கட்டளைச் சட்டம்
  வீதி அபிவிருத்தி அதிகாரசபைக் கட்டளைச் சட்டம்
  மோட்டார் வாகனப் போக்குவரத்துக் கட்டளைச் சட்டம் போன்ற...... ) **இரண்டுக்கு 02 புள்ளிகள்**

(viii) 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பிற்கிணங்க பாராளுமன்றத்தின் அதிகாரங்களும் பணிகளும்

- ★ சட்டம் உருவாக்கம்.
- ★ சட்டத்தை நிறைவேற்றுதல் / சடடத்தைப் பிறப்பித்தல்
- ★ நிறைவேற்றுத்துறையை நிர்வகித்தல்.
- ★ வரவு செலவுத்திட்ட நிர்வாகம் நிதி நிர்வாகம்
- ★ வினாக்களைத் தொடுத்தல்
- ★ நிறைவேற்றுத்துறைக்குத் தேவையான பெரும்பான்மையை வழங்குதல்
- ★ பொதுமக்களின் துயரங்களை முன்வைத்தல்
- ★ அரசாங்கத்தின் செயற்பாடுகளை நேர்மையாக விமர்சித்தல்
- ★ அரசியல் யாப்பு மாற்றங்களுக்குப் பங்களிப்புச் செய்தல்
- ★ குற்றப் பிரேரணைகளை நிறைவேற்றுதல்
- ★ நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை முன்வைத்தல்
- ★ எதிர்காலத்திற்கான தலைவர்களைப் பயிற்றுவித்தல்

**இரண்டுக்கு 02 புள்ளிகள்**

(ix) இலங்கை அரசு பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்

- ★ சீடோ உடன்படிக்கைகளுக்கற்ப 1993ம் ஆண்டு இலங்கையில் பெண்கள் பிரகடனம் வெளியிட்டமை.
- ★ பெண்களுக்கென மகளிர் அமைச்சை ஏற்படுத்தியமை.
- ★ பெண்களுக்கு எதிராக ஏற்படும் வேறுபாடுகள் தொடர்பாக விசாரணை செய்ய தேசிய மாதர்குழு அமைக்கப்பட்டமை.
- ★ பெண்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் எதிராக புரியப்படும் குற்றங்களை குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையில் உட்படுத்தியமை.
- ★ பெண்களுக்கு எதிராக அவர்களது வதிவிடங்களில் ஏற்படும் கொடுமைகள் தொடர்பாக வீட்டுத்துன்புறுத்தல் பற்றிய சட்டத்தை அமுல்படுத்தியமை.
- ★ அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும், பெண்களுக்குரிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக பெண்கள் அலகொன்றை ஏற்படுத்தியமை.

**இரண்டுக்கு 02 புள்ளிகள்**

(x) சமூகச் சூழல் பாதிக்கப்படுவதன் விளைவுகள்

- ★ சமூகத் தொடர்புகள் சீர்குலைதல்
- ★ சமய மற்றும் இன மோதல்கள் ஏற்படுதல்
- ★ சமூக அநீதிகள் ஏற்படுதல்
- ★ குடும்ப அமைப்பு சீர்குலைதல்
- ★ பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான தொடர்புகள் சீர்குலைதல்
- ★ சமூக சீர்கேடுகள் அதிகரித்தல்
- ★ சமூக விரோதச் செயல்கள் அதிகரித்தல்

**இரண்டுக்கு 02 புள்ளிகள்**
**ஒரு வினாவுக்கு புள்ளி 02×10 = 20**

**1 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான முழுமையான அவதானிப்புக்கள், முடிவுகள், ஆலோசனைகள்**




முதலாம் வினா கட்டாயமானது எனினும் 99% விடையளித்துள்ளனர். இவ்வினாவுக்கு 20 புள்ளிகள் ஆகும்.

புள்ளி 0 - 5 வகுப்பாயிடையில் 34%
புள்ளி 6 - 10 வகுப்பாயிடையில் 31%
புள்ளி 11 - 15 வகுப்பாயிடையில் 22%
புள்ளி 16 - 20 வகுப்பாயிடையில் 13%
என புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்காக 16 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் பெற்றவர்களின் வீதம் 13% ஆவதோடு பரீட்சார்த்திகளில் 34% பரீட்சார்த்திகள் 5 புள்ளிகளுக்கும் குறைவாகவே பெற்றுள்ளனர்.




1ம் வினா 10 பகுதிகளைக் கொண்டது. அவற்றுள் இலகுதன்மை கூடிய பகுதி (i) ஆகும். அது 70%. அதே போன்று இலகுதன்மை குறைந்த பகுதி (vii) ஆகும். அது 32% ஆகும்.

முதலாம் வினாவுக்காக 20 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 16 - 20 புள்ளிகளுக்கிடையில் பெற்றவர்களின் 13% ஆகும். 0 - 05 இற்கிடையில் பெற்றோர் 34% ஆகும்.

முதலாம் வினாவில் (i) ம் பகுதிக்கான உயர் இலகுதன்மை 70% ஆகும். ஜனநாயகம் தொடர்பாக மாணவர் மத்தியில் மிகுந்த தெளிவு காணப்படுவது இவ் இலகுத்தன்மைக்குக் காரணமாகும்.

வினாவில் நடுப்புள்ளியை வெளிக்காட்டும் பகுதிகளாக (ii), (iv), (vi) மற்றும் (viii) அமைந்துள்ளது. இவ்வினாவுக்காக அரசொன்றுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகள், நல்லாட்சி, மோதல் தீர்வு, 1978 அரசியல் யாப்பிற்கமைவாக பாராளுமன்ற அதிகாரங்கள் முதலிய பகுதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இத்துறைகள் தொடர்பாக மாணவர்களின் விளக்கம் திருப்திகரமானதாக காணப்படுகிறது.

குறைந்த இலகுதன்மையைக் காட்டும் பகுதிகள் (iii), (vii) மற்றும் (ix) ஆகும். அவை முறையே 33%, 32%, 32% பெற்றுள்ளன. அதில் உள்ளடங்கும் துறைகளான அரசின் பண்புகள், சட்டம், மனித உரிமைகள் பற்றி சரியான, தெளிவான அறிவு இன்மையே குறைந்த இலகுதன்மையை பெற்றுள்ளமைக்கு காரணமாக அமைந்துள்ளது.

இவ்வடைவு மட்டத்தை விருத்தி செய்வதற்கு பாடத்துறைகள் சார்ந்த குறுவினாக்களைத் தயாரித்து விடையளிப்பதற்கு மாணவர்களைத் தூண்டுதல், அறிவுப்புதிர்ப் போட்டிகளை நடாத்துதல் போன்ற முறைகளைச் சுட்டிக்காட்டலாம்.

**2 ஆம் வினா**

| |
|---|
| (02) எதிர்பார்க்கை : ஜனநாயக ஆட்சியொன்றின் பிரதான கூறுகள் மற்றும் பண்புகள் தொடர்பான அறிவையும் விமர்சன ரீதியான விளக்கத்தையும் பெற்றிருத்தல். |

**2.** (i) இலங்கை வாக்காளர்களுக்கு தமது வாக்கைப் பயன்படுத்தக் கிடைக்கும் **இரண்டு** தேர்தல் வாய்ப்புக்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) சனநாயக ஆட்சி முறையொன்றில் எதிர்க்கட்சியினால் நிறைவேற்றப்படவேண்டிய பணிகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (அ) அரசியல் கட்சி முறையின் **இரண்டு** வெவ்வேறு வகைகளைப் பெயரிடுக.

(ஆ) போட்டிக் கட்சி முறையொன்றின் **மூன்று** நல்லியல்புகளைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

2 **(i)**

- ★ ஜனாதிபதி தேர்தல்.
- ★ பாராளுமன்றத் தேர்தல்
- ★ மாகாண சபைத் தேர்தல்
- ★ உள்ளூராட்சி மன்றத் தேர்தல் (மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை தேர்தல்கள்)

(இரண்டு காரணிகளுக்கு 01+01= 02 புள்ளிகள்)

**(ii)** ஜனநாயக ஆட்சிமுறையில் எதிர்கட்சியினால் ஆற்றப்பட வேண்டிய பணிகள்

- ★ ஆளுங்கட்சியினது சிறந்த செயற்பாடுகளை வெற்றிகரமாக நடாத்துவதற்கு ஒத்துழைப்பினை வழங்குதல்
- ★ ஆளுங்கட்சியின் செயற்பாடுகளை ஆராய்ந்து அபிவிருத்திக்கான விமர்சனங்களை முன்வைத்து ஆளுங்கட்சியை நல்வழிப்படுத்தல்
- ★ ஆளுங்கட்சியின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் எதிர்ப்பு தெரிவித்தல்
- ★ மிகச்சிறப்பான மாற்று ஆட்சியை அமைப்பதற்காகச் செயற்படுதல்
- ★ தேசிய அபிவிருத்திக்குத் தேவையான சரியான பொதுசன அபிப்பிராயத்தைக் கட்டியெழுப்புதல் மூன்று விடயங்கள் குறிப்பட்டிருப்பின்

03×01 = 03 புள்ளிகள்

(iii) (அ) அரசியல் கட்சி முறையின் பல்வேறு இயல்புகள்

- ★ ஒரு கட்சி
- ★ இரு கட்சி
- ★ பல கட்சி

**இவற்றில் இரண்டைக் குறிப்பிடுவதற்கு புள்ளிகள் 02**

(ஆ) போட்டித்தன்மை வாய்ந்த கட்சி முறையின் சிறப்பியல்புகள்

- ★ மக்கள் தமது கருத்துக்களைக் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான வாய்ப்பு அதிகரித்தல்.
- ★ தான் தோன்றித்தனமான ஆட்சியைத் தடுத்தல்.
- ★ ஆளுங்கட்சியின் பாதகமான தீர்மானங்களை விமர்சிப்பதன் மூலம் அதனை திருத்திக் கொள்வதற்கான வாய்ப்பு காணப்படுதல்.
- ★ மக்கள் சமூகத்தில் காணப்படும் பல்வகைமைத் தன்மை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் காணப்படும்.
- ★ பல்வகைமையில் ஒன்றுபட்டு செயற்பட வழி ஏற்படுதல்.
- ★ வேற்றுமையில் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப உதவும்.

**மேற்கூறிய விடைகளுக்கு (அ) 02 (ஆ) 03 = 05 புள்ளிகள்**

**2 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான முழுமையான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்**




2 ம் வினாவை தெரிவு வெய்தோர் 78% ஆவர். இவ்வினாவுக்கான புள்ளிகள் 10 ஆகும்.

புள்ளி 0 - 2 வகுப்பாயிடையில் 26%
புள்ளி 3 - 5 வகுப்பாயிடையில் 32%
புள்ளி 6 - 7 வகுப்பாயிடையில் 18%
புள்ளி 8 - 10 வகுப்பாயிடையில் 24%
என புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 08 அல்லது அதற்கு மேல் புள்ளிகளை பெற்றோர் 24% ஆவதோடு பரீட்சார்த்திகளில் 26% மானோர் 02 அல்லது அதற்கும் குறைவாகவே புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 3 உபபகுதிகளைக் கொண்டது. அவற்றுள் இலகுதன்மை கூடிய உபபகுதி (i) ஆகும். அதன் இலகுதன்மை 88% ஆகும். அதேபோன்று குறைந்த இலகுதன்மை கொண்ட உப பகுதி (iii) ஆகும். அதன் இலகுதன்மை 37% ஆகும்.

இரண்டாம் வினாவைத் தெரிவு செய்த பரீட்சார்த்திகளின் வீதம் 78% ஆகும். அதில் (i) ம் பகுதி 88% இலகுதன்மையை காட்டியதுடன் (ii) ம் பகுதி 55% இலகுதன்மையையும் (iii) ம் பகுதியின் (a) 69% (b) 37% இலகுதன்மையைக் காட்டுகின்றது. இங்கு கூடிய இலகுதன்மையை காட்டுவது (i) ம் பகுதியாவதோடு இலங்கையின் தேர்தல்கள் பற்றி இவ்வினா அமைக்கப்பட்டுள்ளமையினால் பரீட்சாத்திகளுக்கு மிகவும் நடைமுறை சார்ந்ததாக இருப்பதே இவ்வடைவுக்கான காரணமாக கூறலாம்.

இங்கு(ii) ம் பகுதியின் இலகுதன்மை 55% ஆக குறைந்த இலகுதன்மை கொண்ட விடையாக (iii) ம் பகுதியின் (b) உபபகுதியாகும். போட்டிக் கட்சி முறையின் சிறப்பியல்புகள் தொடர்பாக மாணவர்களுக்கு சரியான தெளிவின்மையே குறைவான அடைவுக்கு காரணமாக அமைந்துள்ளது எனக் கூறலாம். இவ் இலகுதன்மையை விருத்தி செய்வதற்கு தொடர்பயிற்சிகளில் ஈடுபடுதல், பாட நூல் பயன்பாட்டை தூண்டுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுதல் போன்றன மிகவும் பொருத்தமாக அமையும்.

**3 ஆம் வினா**

(03) எதிர்பார்க்கை :- பல்கலாசார சமூகமொன்றின் அடிப்படை குணவியல்புகள் மற்றும் அவ்வாறான சமூகமொன்றின் பிரசைக்குரிய பொறுப்புகளும் கடமைகளும் தொடர்பான அறிவு மற்றும் விளக்கத்தினைப் பெற்றிருத்தல்.

**3.** (i) ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி தடைப்படல் மற்றும் சமூக நீதி அற்றுப்போதல் ஆகியவற்றில் செல்வாக்குச் செலுத்தும் **இரண்டு** காரணங்களை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பல் கலாசார சமூகமொன்றின் சக வாழ்வுக்காகப் பிரசையொருவரால் தேர்ச்சி பெற வேண்டிய குணவியல்புகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) பல் கலாசார சமூகமொன்றில் நல்லாட்சியைச் செயற்படுத்துவதனால் ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய நல்விளைவுகள் **மூன்றை** விவரிக்க. (05 புள்ளிகள்)

3 **(i)** நாடொன்றின் பொருளாதார வீழ்ச்சிக்கும் சமூக நீதி வீழ்ச்சிக்கும் ஏதுவான காரணிகள்

- ★ அரசியல் அதிகாரம் முறையற்ற வகையில் ஒன்று குவிக்கப்பட்டிருத்தல்
- ★ அரச நிர்வாகம் வினைத்திறனற்றிருத்தல்
- ★ அரச சேவை அரசியல் மயமாக்கப்பட்டடிருத்தல்
- ★ அதிகாரிகளின் ஆதிக்கம்
- ★ அரச கொள்கையைத் தீர்மானித்தல் மற்றும் அமுலாக்கம் தொடர்பில் மக்கள் பங்கேற்பு குறைவாகக் காணப்படல்
- ★ இலஞ்சம் மற்றும் ஊழல்கள் உயர்வடைந்து காணப்படல்
- ★ அரச ஆட்சியாளர்கள் பொறுப்புக்கூறாது செயற்படல்
- ★ பொருத்தமான தொழிநுட்பத்தைப் பயன்படுத்தாமை
- ★ தனியார் துறையானது தேசிய அபிலாசைகளைப் புறக்கணித்தல்
- ★ நவீன தொழில் நுட்பத்தை முறையாக பயன்படுத்த தெரியாமை
- ★ அரசியல் அதிகாரத்தை தவறாக பிரயோகித்தல்

02 காரணிகளுக்கு 01+01= 02 புள்ளிகள்

**(ii)** பல்கலாசார சமூகமொன்றின் நன்னிலவுகைக்கு பிரசையொருவர் வளர்த்துக் கொள்ள வேண்டிய இயல்புகள்

- ★ ஏனையோரின் கலாசாரங்களைப் பற்றி அறிந்து கொண்டு செயற்படல்
- ★ ஏனையோரை மதித்தல்
- ★ பிற சமயங்களுக்கு இடையூறுகளை ஏற்படாதிருத்தல்
- ★ பிற கலாசாரங்களை மதித்தல்
- ★ முரண்பாடுகள் ஏற்படதா விதத்தில் செயற்படல்
- ★ ஐக்கியத்தை மேம்படுத்துதல்
- ★ ஒற்றுமையாகச் செயற்படுவதன் மூலம் சுலபமாக வெற்றியடையவாம் என்பதை புரிந்து கொள்ளல்.
- ★ பிற இனத்தவர்களின் மொழிகளைக் கற்றுக் கொள்ளுதலும் பயன்படுத்தலும்

★ சர்வ மத செயற்பாடுகள், வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்
★ பிறரது கருத்துக்களைச் செவிமடுத்தலும் அவற்றுக்கு மதிப்பளித்தலும்
★ சமத்துவத்துடன் செயற்படுதல்

**மூன்று காரணிகளுக்கு 03 புள்ளிகள்**

**(iii)** பல்கலாசார சமூகமொன்றில் நல்லாட்சியை நடைமுறைப்படுத்துவதனாலேற்படும் நல்விளைவுகள்

★ இனங்களுக்கிடையே நம்பிக்கையை கட்டியெழுப்ப முடிகிறது
★ ஒவ்வொருவருக்கும் இடையில் புரிந்துணர்வு விருத்தியடைகிறது
★ ஆட்சி நடவடிக்கைகள் தொடர்பில் சகல இனத்தவர்களினதும் பங்குபற்றல் வளர்ச்சியடைகிறது
★ ஒவ்வொருவருக்கும் இடையே பரஸ்பரம் மதிப்பளிக்கும் தன்மை விருத்தியடைகிறது
★ சமய, கலாசார வேறுபாடுகளைக் கருத்திற் கொள்ளாது ஒற்றுமையுடன் செயற்படும் நிலை ஏற்படுகிறது
★ சட்ட திட்டங்களுக்கு மதிப்பளித்து சிறந்த பிரசையாக வாழுவதற்குரிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடிகிறது
★ ஒழிவு மறைவின்றி வெளிப்படைத் தன்மையுடன் செயற்படும் நிலை உருவாகின்றது.

**மேற்கூறிய விடைகளை ஒத்தவை எழுதப்பட்டிருப்பின்**
**காரணி 03×01 = 03 புள்ளிகள்**
**விபரம் = 02 புள்ளிகள்**
**05 புள்ளிகள்**

## 3 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான தேசிய ரீதியான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்




3 ஆம் வினாவை தெரிவு செய்தவர்கள் 63% வீதமானவர்கள் ஆவர். இவ்வினாவுக்கான மொத்தப் புள்ளி 10 ஆகும்.

புள்ளிகள் 0 - 2 வகுப்பாயிடையில் 23% ஆகவும்
புள்ளிகள் 3 - 5 வகுப்பாயிடையில் 32% ஆகவும்
புள்ளிகள் 6 - 7 வகுப்பாயிடையில் 21% ஆகவும்
புள்ளிகள் 8 - 10 வகுப்பாயிடையில் 24% ஆகவும்

இவ்வினாவுக்கு 08 புள்ளிகளையோ அல்லது அதற்கு மேல் புள்ளிகளை பெற்றோர் 24% ஆவதோடு 02 புள்ளிகள் அல்லது அதற்கும் குறைவாக பெற்றோர் 23% ஆகும்.




இவ்வினாவில் உபபகுதிகள் 3 உள்ளன. அவற்றுள் இலகுதன்மை கூடிய உபபகுதி (ii) ஆகும்.

அதன் இலகுதன்மை 70% ஆகும். அதேபோன்று இலகுதன்மை குறைந்த உபபகுதி (i) ஆகும். அதன் வீதம் 36% ஆகும்.

3ம் வினாவை தெரிவு செய்த பரீட்சார்த்திகளின் சதவீதம் 63% ஆகும். இவ்வினாவின் பகுதிகளுக்காக பெற்றுக்கொண்டுள்ள புள்ளிகளை நோக்குமிடத்து (i) பகுதி 36% இலகு தன்மையையும் (ii) பகுதி 70% இலகுதன்மையையும் (iii) ம் பகுதி 54% இலகுதன்மையையும் காட்டுகின்றது. இங்கு குறைந்த இலகுதன்மையை காட்டுவது (i) ம் பகுதியாகும். ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி தடைப்படுதல் மற்றும் சமூக நீதி அற்றுப் போதல் ஆகியவற்றில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் தொடர்பான அறிவு குறைவாக உள்ளமையே இதற்கான காரணமாகும். இவ்விலகு தன்மையை அதிகரிப்பதற்கு கொடுப்பதற்கு அபிவிருத்தி எண்ணக்கரு தொடர்பிலும் சமூக நீதி தொடர்பான தெளிவினை விளக்கத்தை பெற்றுக் கொடுப்பதற்குப் பொருத்தமான செயற்பாடுகளை மையப்படுத்திய கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கை திட்டமிடுதல் பொருத்தமானதாகும்.

(ii) ம் பகுதியில் கேட்கப்பட்டுள்ள பல் கலாசார சமூகமொன்றில் சக வாழ்வுக்காக பிரசையொருவரால் விருத்தி செய்ய வேண்டிய குணவியல்புகள் தொடர்பாக மாணவர் மத்தியில் போதுமான விளக்கம் காணப்படுவதைக் கூறலாம். அதற்காக காட்டப்பட்டுள்ள இலகுதன்மை 70% ஆகும்.

(iii) ம் பகுதிக்கான இலகுதன்மை 54% ஆகும். அது சாதாரண நிலையாகும். விடைக்குரிய காரணிகள் குறிப்பிடப்பட்ட போதிலும் விளக்கும் போது, காணப்படுகின்ற இடர்பாடுகள் என்பனவே அதன் இலகுதன்மை சாதாரண மட்டத்தில் இருப்பதற்கு காரணமாகும். இந்நிலையை நீக்கிக் கொள்வதற்கு கட்டமைப்பு ரீதியான வினாப்பயிற்சியை தொடர்ந்தும் நடாத்துவது பொருத்தமானதாகும். இப்பகுதியை கலந்துரையாடும் போது பல்வேறு இனத்தவர்களின் விழாக்களை நடாத்துதல், இனங்களுக்கிடையில் ஒத்துழைப்புக்கள் விருத்தியடையும் வகையிலான நடைமுறைச் செயற்பாடுகளை நடாத்துதல், பல்வேறு இனங்களின் விழாக்களை பார்வையிடுவதற்கான களப்பிரயாணங்களை மேற்கொள்ளுதல் போன்ற வெளிவாரியான செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதனூடாக மாணவர்களின் மனப்பாங்கில் மாற்றத்தைக் கொண்டு வரலாம்.

**4 ஆம் வினா**

| |
|---|
| (04) எதிர்பார்க்கை : ஜனநாயக சமூகமொன்றில் மோதலைத் தவிர்ப்பதன் முக்கியத்துவம் தொடர்பான அறிவு மற்றும் விளக்கத்தினைப் பெறுதல். |

**4.** (i) மோதலை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்துகின்ற பிரதான **இரண்டு** மூலங்களைப் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மோதலைத் தவிர்ப்பதற்காக மத்தியஸ்தர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் போது. கவனத்திற் கொள்ள வேண்டிய **மூன்று** விடயங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) மோதல்களைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்வதின் முக்கியத்துவத்தை **மூன்று** விடயங்களின் துணையுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

4 (i) மோதலேற்படுவதற்கான காரணிகள்

★ இனப்பாகுபாடு
★ அரசியல் கருத்து முரண்பாடு
★ சமூக பொருளாதார நிலை
★ சமயக் கொள்கைகள்

இரண்டு காரணிகளுக்கு 02 புள்ளிகள்

(ii) நடுநிலையாளரைத் தெரிவு செய்யும் போது கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

★ பக்கச் சார்பற்றவராயிருத்தல்
★ மோதல் பற்றி முழுமையான விளக்கத்தைப் பெற்றிருத்தல்
★ தனது முடிவை அல்லது தீர்ப்பை மோதல் தரப்பினர் மீது சுமத்தாதிருத்தல்
★ இரு தரப்பினர் மீதும் செல்வாக்குச் செலுத்தாதிருத்தல்
★ இரு தரப்பினரதும் சம்மதத்துடன் தீர்வை நோக்கி வழி நடாத்துதல்
★ இரு தரப்பினரும் நேரடியாக சந்திக்க முடியாத கட்டங்களில் தனித்தனியாக அவர்களை சந்தித்துக் கருத்துக்களைப் பெற்று இரு தரப்பினரிடமும் செய்தியை எடுத்துரைத்தல்
★ நெகிழ்வான தீர்ப்பினைப் பெற்றுக்கொள்ள வழிசெய்து வெற்றியைப் பெற்றுக் கொடுத்தல்.

மூன்று காரணிகளுக்கு 03 புள்ளிகள்

(iii) மோதலொன்றைச் சமாதானமாகத் தீர்ப்பதன் முக்கியத்துவம்

★ உயிராபத்தைத் தடுத்தல்
★ வளங்கள், சொத்துக்களுக்கான ஆபத்தை தடுத்தல்
★ அடிப்படை உரிமை, மனித உரிமைகளைப் பாதுகாத்தல்
★ உளவியல் பதகளிப்பைக் குறைத்தல்
★ தனிநபர் உளப்பண்பு மேன்மையுறல்
★ சுய கௌரவம் பாதுகாக்கப்படுதல்
★ சமாதானமும் பாதுகாப்பும் பேணப்படுதல்
★ அரசியல் உறுதிப்பாடு
★ பொருளாதார உறுதிப்பாடு
★ இனங்களிடையே ஐக்கியம் ஏற்படல்
★ நாடு செழிப்படைதல்

மூன்று காரணிகளுக்கு - 03 புள்ளிகள்
விளக்கம் - 02 புள்ளிகள்
மொத்தம் 05 புள்ளிகள்

**4 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான தேசிய ரீதியான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்**




நான்காம் வினாவை தெரிவு செய்தோர் 86% வீதமானோர் ஆவர். இவ்வினாவுக்கான மொத்த புள்ளி 10 ஆகும்.

புள்ளி 0 - 2 வகுப்பாயிடையில் 32% ஆகவும்
புள்ளி 3 - 5 வகுப்பாயிடையில் 33% ஆகவும்
புள்ளி 6 - 7 வகுப்பாயிடையில் 18% ஆகவும்
புள்ளி 8 - 10 வகுப்பாயிடையில் 17% ஆகவும்
என புள்ளிகள் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 08 புள்ளிகளை அல்லது அதற்கு மேலாக பெற்றோர் 17% வீதமானவராவதோடு 32% வீதமானோர் 02 புள்ளிகள் அல்லது அதற்கு குறைவாக பெற்றுள்ளனர்.




இவ்வினாவானது 3 உப பகுதிகளை கொண்டுள்ளதோடு அவற்றுள் இலகுதன்மை கூடிய உப பகுதியாக (ii) ஆவதும் அதன் இலகுதன்மை 55% வீதமும் ஆகும். இலகுதன்மை குறைந்த உப பகுதி (i) ஆகும். அதன் இலகுதன்மை 21% வீதமாகும்.

இவ்வினாவைத் தெரிவு செய்த பரீட்சார்த்திகளின் வீதம் 86% ஆகும். இங்கு (i)ம், (ii)ம் மற்றும் (iii)ம் பகுதிகளின் 21%, 55%, 49% என இலகுதன்மை காட்டப்பட்டுள்ளது. இங்கு (i) ம் பகுதியான மோதல் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் மூலங்களை குறிப்பிடுவதற்கான குறைந்த இலகுதன்மையினை 21% காட்டியுள்ளனர். இதற்கான பிரதான காரணமாக அமைவது மோதல் ஏற்படுவதற்குரிய மூலங்கள் மற்றும் மோதல் ஏற்படும் விதம் தொடர்பாக வெவ்வேறாக இனங்காண்பதற்கு முடியாமல் போனமையாகும். இதற்காக மோதல் ஏற்படுவதற்கு ஏதுவான மூலங்களையும் மோதல் ஏற்படும் விதம் பற்றியும் வெவ்வேறான வகையில் ஒப்படைகள், செயற்பாடுகளை வடிவமைப்பதனூடாக அறிவு மற்றும் விளக்கத்தைப் பெற்றுக் கொடுப்பது முக்கியமாகும்.

(ii) ம் பகுதியில் கேட்கப்பட்டுள்ள மத்தியஸ்தர் ஒருவரை தேர்ந்தெடுக்கும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றி காட்டப்பட்டுள்ள இலகுதன்மை 55% ஆகும். இதன் மூலம் தெரிய வருவது இவ்விடயம் தொடர்பாக பரீட்சார்த்திகளின் மத்தியில் சாதாரணமான விளக்கம் காணப்பட்டுள்ளமையாகும். அதனை மேலும் விருத்தி செய்வதற்காக, பாடப்புத்தகத்தின் மீது அதிக கவனமெடுப்பதோடு பயிற்சிகளைச் செய்வித்தல், பாத்திரமேற்று நடித்தல் போன்ற பிரயோகச் செயற்பாடுகளின் மூலம் மோதல் தவிர்ப்பு தொடர்பான தெளிவை ஏற்ப்படுத்தும் உபாயங்களை கையாண்டு விளைதிறனை அதிகரித்துக் கொள்ளலாம்.

மோதலை சமாதானமாக தீர்த்துக் கொள்வதன் முக்கியத்துவத்தினடிப்படையில் வினவப்பட்டுள்ள (iii) ம் பகுதிக்காக காட்டப்பட்டுள்ள இலகுதன்மையானது 49% ஆகும். இது சாதாரண மட்டமாவதோடு பரீட்சார்த்திகள் மத்தியில் பகுப்பாய்வுத்திறன் குறைவடைந்து காணப்படுதல் இதற்கு காரணமாகும். விடயங்களை தெளிவாக முன்வைக்கக்கூடிய வகையிலான பயிற்சிகளை செய்வதற்குப் பயற்றுவித்தல், பாடபுத்தகத்தினை பரிசீலனைக்குட்படுத்தல் மற்றும் பாடத்துறையை விருப்புடன் கற்பதற்குரிய கற்றல் - கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

5 ஆம் வினா

(05) எதிர்பார்க்கை :- இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் தற்கால நீதிமன்ற முறையின் தன்மை தொடர்பான பகுப்பாய்வுடன் கூடிய விளக்கத்தைப் பெறுதல்.

**5.** (i) சட்டத்தின் மூலாதாரங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) உள்நாட்டு சட்டத்தில் அடங்கும் **மூன்று** பிரிவுகளைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(iii) இலங்கையின் தற்கால நீதிமன்ற முறைமையில் உள்ள உயர்வான நீதிமன்றங்கள் **மூன்றைப்** பெயரிட்டு அதில் **ஒன்றின்** செயற்பாட்டை விளக்குக. (05 புள்ளிகள்)

**5** (i) சட்ட மூலங்கள்

- ★ அரசியலமைப்பு
- ★ பல்வேறு கட்டளைச் சட்டங்கள்
- ★ நீதிமன்றத் தீர்ப்புகள்
- ★ சட்ட வல்லுனர்களின் கருத்துகளும் சிந்தனைகளும்
- ★ பழக்க வழக்கங்கள்
- ★ சமயம்

இரண்டு காரணிகளுக்கு 02 புள்ளிகள்

(ii) தேசிய சட்டங்களின் வகைகள்

- ★ அரசியல் யாப்புச் சட்டம்
- ★ குற்றவியல் சட்டம்
- ★ குடியியல் சட்டம்

மூன்று காரணிகளுக்கு - 03 புள்ளிகள்

(iii) இலங்கையின் தற்போதைய நீதித்துறைக் கட்டமைப்பில் உயர் நிலையிலுள்ள நீதிமன்றங்கள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றின் செயற்பாடுகளை விளக்குதல்

☞ உயர் நீதிமன்றங்கள் மூன்று

- ★ மீயுயர் நீதிமன்றம் / உச்ச நீதிமன்றம் / Supreme Court
- ★ மேன்முறையீட்டு நீதிமன்றம் Court of Appeal
- ★ மாகாண மேல் நீதிமன்றம் (Provincial High Court) / மேல் நீதிமன்றம்

மூன்று நீதிமன்றங்களைப் பெயரிடல்

☞ செயற்பாடுகள்

- ★ உயர் நீதிமன்றம் : தலைமை - பிரதம நீதியரசர்
  - ● அரசியல் யாப்புக்கு வியாக்கியானம் கூறும் அதிகாரம்
  - ● அடிப்படை உரிமைகள் தொடர்பாக விசாரணை செய்யும் அதிகாரம்
  - ● ஆலோசனை வழங்கும் அதிகாரம்
  - ● பாராளுமன்ற வரப்பிரசாதங்கள் தொடர்பான நீதி அதிகாரம்
  - ● விதிகளைத் தயாரிக்கும் நீதி அதிகாரம்
  - ● இறுதி மேன் முறையீட்டை விசாரணை செய்யும் அதிகாரம்
  - ● ஜனாதிபதித் தேர்தல் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகாரம்
  - ● பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகாரம்
  - ● குற்றப்பிரேரணையை விசாரணை செய்தல்

குறைந்த பட்சம் இவை போன்ற விடயங்கள் விளக்கப்பட்டிருத்தல்

★ மேன்முறையீட்டு நீதிமன்றம்

தலைமை: மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவராவார்

- மேன்முறையீட்டு நீதிபதிகளை நியமித்தல் அரசியலமைப்பு பேரவையின் அனுமதியுடன் ஜனாதிபதியால் மேற்க்கொள்ளப்படும்.
- மேல் நீதிமன்றம் மற்றும் வேறு நீதிமன்றத் தீர்ப்புக்களை எதிர்த்துத் தொகுக்கப்படும் வழக்குகளை விசாரித்தல்
- பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்தல்
- பல்வேறு கட்டளைகளைப் பிறப்பிக்கும் அதிகாரம்
  உ+ம் : ஹபயாஸ் கோபஸ், சர்சியோரார், மெண்டிமுஸ், குவோவொரண்டோ மற்றும் தடை உத்தரவுகள்
- ஆரம்பத்தில் நீதிமன்றங்களின் அறிக்கைகளைத் திறனாய்வு செய்வதற்கும் பரிசீலிப்பதற்குமான அதிகாரம்

இவற்றுள் இரண்டு விடயங்களைக் குறிப்பிடல்

★ மாகாண மேல் நீதிமன்றம் / மேல் நீதிமன்றம்

- மாகாண மேல் நீதிமன்ற நீதிமதிகளை நியமித்தல் பிரதம நீதியரசரால் மேற்கொள்ளப்படும்
- வர்த்தகப் பிரச்சினைகளைத் தீர்த்தல்
- தொழில் நியாய மன்ற தீர்வு பற்றி மேல் நீதிபதிகளை விசாரித்தல்
- நீதவான், மாவட்ட நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு எதிரான மேன் முறையீடுகளை விசாரணை செய்தல்
- மாகாண சபைகளுக்குரிய கட்டளைகளை விதித்தல்
- மாகாண சபைகளுக்கு ஹபயாங் கோபிரஸ் (ஆட்கொணர்வு மறு கட்டளைப் பிறப்பித்தல்)

இரண்டு விடயங்களைக் குறிப்பிடல்

★ மேல் நீதிமன்றம்

- பாரதூரமான குற்றங்கள் தொடர்பான நீதிமன்ற அதிகாரம் (கொலை, பெண்கள் விளிப்புணர்வு, பாரியளவு கொள்ளை, அரசுக்கெதிரான சூழ்ச்சி போன்றன)
- கடற்படை நீதிமன்ற அதிகாரம்
- இலங்கை வான் பரப்பில் மேற்க்கொள்ளப்படும் குற்றங்கள்
- நீதிச் சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்களை விசாரணை செய்தல்

மேற்கூறப்பட்ட விடயங்களையொத்த விடயங்கள் இரண்டேனும் விடையில் அடங்கியிருத்தல் வேண்டும்.

மூன்று நீதிமன்றங்களை பெயரிடுவதற்கு = புள்ளிகள் 03

ஒரு நீதிமன்றத்தின் செயற்பாடுகளை விளக்குவதற்கு = புள்ளிகள் 02

புள்ளிகள் 05

**5 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான முழுமையான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்**




5ம் வினாவை தெரிவு செய்துள்ளோர் 71% ஆவர். இவ்வினாவுக்கு மொத்தம் 10 புள்ளிகள்.

புள்ளிகள் 0 - 2 வகுப்பாயிடை 16% ஆகவும்
புள்ளிகள் 3 - 5 வகுப்பாயிடை 33% ஆகவும்
புள்ளிகள் 6 - 7 வகுப்பாயிடை 22% ஆகவும்
புள்ளிகள் 8 - 10 வகுப்பாயிடை 29% ஆகவும்
என புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 08 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் பெற்றவர்கள் 29% ஆவர். 16% பரீட்சார்த்திகள் 02 புள்ளிகள் அல்லது அதற்கும் குறைவாக பெற்றோர்.




இவ்வினாவானது 3 உபபகுதிகளைக் கொண்டது. அவற்றுள் இலகுதன்மை கூடியதாக (iii)ம் பகுதியும் அது 72% ஆகும். இலகுதன்மை குறைந்ததாக (ii) ம் பகுதியும் அது 49% காணப்படுகிறது.

இவ்வினாவை 71% பரீட்சார்த்திகள் தெரிவு செய்துள்ளனர். சட்டத்தின் மூலாதாரங்கள் உள்ளடங்கிய (i) ம் பகுதியின் இலகுதன்மை 66% ஆகும். சட்டத்தின் பிரிவுகள் தொடர்பாக வினவப்பட்ட (ii) ம் பகுதியின் இலகுதன்மை 49% ஆகும். (iii) ம் பகுதியின் இலகுதன்மை 72% ஆகும். இலங்கையின் தற்கால நீதிமன்ற முறை பற்றி கேட்கப்பட்ட இப்பகுதி கூடிய இலகுதன்மையைப் பெற்றுள்ளது.

இங்கு குறைந்த இலகுதன்மையை காட்டியுள்ளது உள்நாட்டு சட்டத்தின் பிரிவுகள் தொடர்பான வினாவுக்காகும். பாடப்புத்தகத்தைச் சரியான முறையில் பயன்படுத்தாமை இதற்கான காரணமாகும். இதன் அடைவு மட்டத்தை அதிகரிப்பதாயின் பாடப்புத்தகத்தினைப் பயன்படுத்துவதற்கு மாணவர்களைத் தூண்டுதல், திறந்த நூல் பரீட்சைகளை தொடர்ந்தேர்ச்சியாக நாடாத்துதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுதல் வேண்டும்.

இங்கு கூடிய இலகுதன்மையைக் காட்டியுள்ள (iii) ம் பகுதியில் வினவப்பட்டுள்ளது, இலங்கையின் நீதிமன்ற முறைகளும் அதன் செயற்பாடுகளும் தொடர்பாகவாகும். இது தொடர்பாக பரீட்சார்த்திகள் மத்தியில் தெளிவான விளக்கம் காணப்படுவது புலனாகின்றது. நீதிமன்ற நிறுவனங்கள் பற்றி விசாரணை செய்து விடையளித்தல், அவைகளை மதிப்பீடு செய்து கலந்தாலோசித்தல், களப்பிரயாணங்கள் மூலம் அறிவை உறுதிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் பெற்றுக்கொடுத்தல் போன்ற முறைகளை பயன்படுத்தி சிறப்பாக விடையளிப்பதற்குரிய திறனை மென் மேலும் விருத்தி செய்தல் வேண்டும்.

**6 ஆம் வினா**

எதிர்பார்க்கை :- மனித உரிமைகளின் முக்கியத்துவம் மற்றும் இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக காணப்படுகின்ற வழிமுறைகள் தொடர்பான அறிவு மற்றும் விளக்கத்தினை பெறுதல்.

**6.** (i) மனித உரிமைகளை வென்றெடுப்பது தொடர்பாக முக்கியத்துவம் பெறுகின்ற வரலாற்று ரீதியான **இரண்டு** சந்தர்ப்பங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) மனித உரிமைகளின் தன்மைக்கேற்ப அவற்றைப் பிரித்துக் காட்டக்கூடிய உரிமை வகைகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (அ) ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயத்தை தயாரிக்கும் போது அடிப்படையாகக் கொண்ட பிரதான நோக்கங்கள் **இரண்டைப்** பெயரிடுக.

(ஆ) சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இலங்கை எடுத்துள்ள படிமுறைகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

6 (i) மனித உரிமைகளை வென்றெடுத்ததுடன் தொடர்பான வரலாற்றுச் சந்தர்ப்பங்கள் இரண்டு

★ கி.பி. 1215 - மக்னா காட்டா உடன்படிக்கை
★ கி.பி. 1869 - பிரித்தானிய மனித உரிமைகள் பற்றிய உடன்படிக்கை
★ கி.பி. 1776 - அமெரிக்க சுதந்திர பிரகடனம்
★ கி.பி. 1789 - மனிதன் மற்றும் பிரஜைகளின் உரிமை தொடர்பான பிரான்சிய பிரகடனம்
★ கி.பி. 1917 - ரஷ்ய புரட்சி
★ கி.பி. 1948 - மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனம்

இரண்டு காரணிகள் குறிப்பிட்டிருப்பின் 02 புள்ளிகள்

(ii) மனித உரிமைகளின் இயல்புகளுக்கேற்ப வகைப்படுத்தல்

★ குடியியல் உரிமை
★ அரசியல் உரிமை
★ பொருளாதார உரிமை
★ சமூக உரிமை
★ கலாசார உரிமை

மூன்று காரணிகள் குறிப்பிட்டிருப்பின் 01×3 = 03 புள்ளிகள்

**(iii)** (அ) ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமை சமவாயத்தை தயாரிப்பதில் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட சிறப்பு நோக்கங்கள்

- ★ சிறுவர் பாதுகாப்பு
- ★ பங்கு கொள்ளல்
- ★ உயிர் வாழ்தல் (இருத்தல்)
- ★ அபிவிருத்தி

இரண்டு குறிப்பிட்டிருப்பின் 02 புள்ளிகள்

(ஆ) சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள்

- ★ ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமை தொடர்பான சமவாயத்தை ஏற்று நடைமுறைப்படுத்தல்.
- ★ பிள்ளைகள் தொடர்பில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவர்கள் பற்றிய அனைத்து தீர்மானங்களிலும் பிள்ளையின் உயர்ந்தபட்ச நன்மையைக் கருத்திற் கொண்டு செயற்படல்.
- ★ இலங்கையில் சட்டத்தை உருவாக்கும்போது சிறுவர் உரிமை பற்றிய சமவாயத்திற்கு இணங்க மேற்கொள்ளல்.
- ★ சிறுவர் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேசிய சிறுவர் அதிகார சபையை தாபித்து செயற்படுவதோடு அதிகாரத்தைப் பிரயோகித்தல்.
- ★ சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் தாபிக்கப்பட்டுள்ளமை
- ★ சகல பொலிஸ் நிலையங்களிலும் சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான முறைப்பாடு, விசாரணைகளை மேற்கொள்ளவதற்கான அலகை நிறுவுதல்.

- ★ சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக சிறுவர் தொலைபேசி இலக்கம் அறிமுகம செய்யப்பட்டுள்ளமை.
(Child Line Sri Lanka – 1929)

மூன்று காரணிகளுக்கு 03 புள்ளிகள்

(அ) 02 (ஆ) 03 = 05 புள்ளிகள்

**6 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான முழுமையான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்**




6 வது வினாவை 30 % பரீட்சார்த்திகள் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.

புள்ளிகள் 0 - 2 வகுப்பாயிடை 39 % ஆகவும்
புள்ளிகள் 3 - 5 வகுப்பாயிடை 27% ஆகவும்
புள்ளிகள் 6 - 7 வகுப்பாயிடை 16 % ஆகவும்
புள்ளிகள் 8 - 10 வகுப்பாயிடை 18% ஆகவும்
என புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 08 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் பெற்றவர்கள் 18% ஆகும். 39% பரீட்சார்த்திகள் 02 புள்ளிகள் அல்லது அதற்கும் குறைவாகப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 3 உபபகுதிகளைக் கொண்டது. அவற்றுள் இலகு தன்மை கூடியது (iii) (a) பகுதியாகும். அதன் இலகுதன்மை 57% ஆகும். அதேபோன்று இலகுதன்மை குறைந்த உபபகுதி (ii) ஆகும். அதன் இலகுதன்மை 42% ஆகும்.

இவ்வினாவை 30% பரீட்சாரத்திகள் தெரிவு செய்துள்ளனர். இது குறைந்த மட்டத்தினையே காட்டுகின்றது. இவ்வினாவின் (i) ம் (ii) ம் மற்றும் (iii) ம் பகுதிகளின் இலகுதன்மை முறையே 52%, 42% (iii) (a) 57% (iii) (b) 44% ஆகும்.

இவ்வினாவை குறைந்தளவிலானோர் தெரிவு செய்தமையில் செல்வாக்கு செலுத்தியுள்ள காரணியாக, மனித உரிமைகள் தொடர்பாக பரீட்சார்த்திகள் மத்தியில் சரியான விளக்கம் இன்மையாகும். இங்கு (i) ம் பகுதியான மனித உரிமைகளை வென்றெடுத்த வரலாற்று ரீதியான சந்தர்ப்பங்கள் பற்றிய இலகுதன்மை நடுத்தர அளவில் காணப்படுவதற்கு, மனித உரிமைகள் தொடர்பான வரலாறு பற்றி பரீட்சார்த்திகளிடம் குறைந்தளவு விளக்கமே காணப்படுகின்றமையை சுட்டிக்காட்ட முடியும். இங்கு விளைதிறனை விருத்தி செய்வதற்காக மனித உரிமைகள் தொடர்பான எழுதப்பட்டுள்ள நூல்களை வகுப்பறைக்குக் கொண்டு வந்து மாணவர் பார்க்கக் கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்தல், மூலம் தொடர்பில் விருப்பினை ஏற்படுத்த முடியும்.

இவ்வினாவில் 42% குறைந்த இலகுதன்மையை காட்டுவது (ii) ம் பகுதியாகும். அதாவது மனித உரிமைகளின் இயல்பிற்கேற்ப அவற்றை வேறுபடுத்தி அறியக்கூடியவை தொடர்பானதாகும். இங்கு பரீட்சார்த்திகள் மத்தியில் மனித உரிமைகளை முறையாக வேறுபடுத்தி அறியக்கூடிய திறன் விருத்தி செய்யப்படவில்லை என்பது தெளிவாகின்றது. மனித உரிமைகளின் பிரிவுகளை அட்டவணைப்படுத்தி அதனை எந்நேரமும் பார்வையிடக்கூடிய இடங்களில் வகுப்பறையினுள் காட்சிப்படுத்துவதனூடாக இதற்கு விடையளிக்கும் திறனை விருத்தி செய்யலாம்.

**7 ஆம் வினா**

| |
|---|
| எதிர்பார்க்கை :- சுற்றாடல் மற்றும் மனித செயற்பாடுகள் என்பவற்றுக்கிடையில் காணப்படும் தொடர்புகள் மற்றும் சூழல் முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் தொடர்பான விளக்கத்தை பெறுதல். |

**7.** (i) சுற்றாடற் தொகுதியில் உயிரற்ற கூறுகள் **இரண்டைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) சுற்றாடலிருந்து மனிதனுக்கு கிடைக்கும் **மூன்று** சேவைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) நிலையான அபிவிருத்தியைப் பேணுவதற்காக அரசினால் ஆற்றப்பட வேண்டிய கடமைகள் **மூன்றைக்** குறிப்பிட்டு அதில் **ஒன்றைப்** பற்றி விவரிக்க. (05 புள்ளிகள்)

**7** (i) சூழற்றொகுதியில் அடங்கியுள்ள உயிரற்ற கூறுகள்
- ★ வளிக் கோளம்
- ★ நீர்க் கோளம்
- ★ கற் கோளம்
- ★ காலநிலை
- ★ பாறைகள்
- ★ மண்
- ★ தரைத்தோற்ற அம்சங்கள்
- ★ கடல்
- ★ உள்நாட்டு நீர் நிலைகள்
- ★ சூரிய ஒளி

இரண்டு காரணிகளுக்கு 01+01= 02 புள்ளிகள்

(ii) சூழலினால் மனிதனுக்குக் கிடைக்கும் சேவைகள்
- ★ வாழ்க்கைக்கு உதவும் சேவைகள்
  (சூரிய ஒளி / காற்று / நீர் )
- ★ பொருளாதார உதவிச்சேவைகள் (மூலப்பொருள் - நிலம், களியவளம், இரசாயனப்பொருள், தாவரம், விலங்கு, உணவு) சக்திவலு
  (சூரிய சக்தி, உயிர்ச்சுவட்டு எரிபொருள், உயிரியல் வாயு, புவி வெப்பம், நீர் மின்சாரம், காற்று)
- ★ கழிவு உறிஞ்சல் சேவைகள்

மூன்று காரணிகளுக்கு 01+01+01=03 புள்ளிகள்

(iii) நிலையான அபிவிருத்திக்கான அரசொன்றின் கடமைகள்
- ★ சூழல் பாதுகாப்பு வேலைத்திட்டங்களைத் தயார்படுத்தலும் நடைமுறைப்படுத்தலும்
- ★ சூழல் நேயப் பொருட்களையும் சேவைகளையும் வழங்குவோரை ஊக்குவித்தல்
- ★ சூழல் நேய உற்பத்திகள் மற்றும் சேவைகளை நுகர்வதன் முக்கியத்துவம் தொடர்பில் பொதுமக்களை அறிவூட்டல்
- ★ சூழலுக்குரிய சட்டதிட்டங்களையும் அதிகாரங்களையும் நடைமுறைப்படுத்தல்
  - 1980 தேசிய சுற்றாடல் சட்டம்
- ★ சூழல் பாதுகாப்பு மதிப்பிடல் (EIA)
- ★ சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் (EPA)
- ★ சுற்றாடல் தாரங்களை அறிமுகம் செய்தல்
- ★ சூழல் பாதுகாப்பிற்குற்பட்ட பிரதேசங்களைப் பிரகடனப்படுத்தல்
- ★ பச்சை வீட்டு வாயு வெறியேற்றத்தைக் கட்டுப்படுத்துதல்
- ★ அபரிமிதமான நுகர்வைக் கட்டுப்படுத்துகின்ற சூழல்நேய வாழ்க்கை முறைக்கு மக்களை வழிப்படுத்துதல்.

மூன்று விடயங்களுக்கு 03 புள்ளிகள்
விளக்கம் 02 புள்ளிகள்
05 புள்ளிகள்

**7 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான முழுமையான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்**




இவ்வினாவிற்கு வழங்கப்பட்டுள்ள புள்ளிகள் 10 ஆகும்.

0 - 2 இன் இலகுதன்மை 28% ஆகவும்
3 - 5 இன் இலகுதன்மை 36% ஆகவும்
6 - 7 இன் இலகுதன்மை 18% ஆகவும்
8 - 10 இன் இலகுதன்மை 18% ஆகவும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 08 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் 18% பெற்றவர்கள் ஆகும். 02 புள்ளிகள் அல்லது அதற்கும் குறைவாக பெற்றோர் 28% ஆகும்.




இவ்வினா 3 உபபகுதிகளை கொண்டுள்ளது. அவற்றுள் இலகுதன்மை கூடிய உபபகுதி (i) ஆகும். அதன் இலகுதன்மை 62% ஆகும். அதேபோன்று குறைந்த இலகுதன்மையை கொண்ட உபபகுதி (iii) ஆகும். அதன் இலகுதன்மை 42% ஆகும்.

ஏழாம் வினாவை 67% பரீட்சார்த்திகள் தெரிவு செய்துள்ளனர். இங்கு (i) ம் பகுதியின் இலகுதன்மை 62% ஆகும். இது திருப்தியான நிலையாகும். சுற்றாடல் தொகுதியில் அமையப்பெற்றுள்ள உயிரற்ற கூறுகள் தொடர்பான அறிவை மீட்டுப்பார்ப்பதே இப்பகுதியின் நோக்கமாகும். அதற்கு திருப்திகரமான விடைகளும் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வடைவு மட்டத்தை மேலும் விருத்தி செய்து கொள்வதற்காகக் காட்சிப் படங்கள் மற்றும் வரைபுகள் முதலியவற்றினூடாக அறிவை உறுதிப்படுத்தல் முக்கியம் பெறுகின்றது.

(ii) ம் பகுதிக்கு 56% இலகுதன்மை காட்டப்பட்டுள்ளது. " சுற்றாடலிலிருந்து மனிதனுக்கு கிடைக்கும் பயன்கள் " போன்ற பொதுவான வினாவுக்கு பரீட்சார்த்திகள் காட்டியுள்ள துலங்கல் போதுமானது. ஒட்டுமொத்த சமூகத்திலும் நிலவும் சூழலியல் பற்றிய அவதானம் குறைவடைதல் இதற்கான முக்கிய காரணியாகும். போதுமான காரணிகளினடிப்படையில் தயாரிக்கப்பட்ட வினா பத்திரத்திற்கு விடையளிக்க மாணவர்களை உட்படுத்துவதற்கு ஆசிரியர்கள் ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் அடைவு மட்டத்தினை விருத்தி செய்து கொள்ள இயலும். சூழல் நேயமிக்க மனப்பாங்கு விருத்திடையும் விதத்தில் செயற்திட்டங்களை முன்னெடுப்பதில் ஆசிரியர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

(iii) ம் பகுதியில் நிலையான அபிவிருத்திக்காக அரசினால் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. அதன் இலகுதன்மை 42% இருப்பதோடு நிலையான அபிவிருத்தி எண்ணக்கரு தொடர்பில் தெளிவான விளக்கமொன்று மாணவரிடத்தில் இல்லாதிருப்பது இதற்கு காரணமாகும். இப்பகுதியின் இலகுதன்மையை மேலும் விருத்தி செய்வதற்காக நிலையான அபிவிருத்திக்கான பொருள் விளக்கத்தினை கொண்ட காட்சிப் பலகைகளை வகுப்பறையில் கண்ணுக்குப் புலப்படுமாறு காட்சிப்படுதலும் அபிவிருத்தி மற்றும் நிலையான அபிவிருத்தி ஆகிய தலைப்புகளின் கீழ் விவாதங்களை நடாத்ததுதலும் போன்ற மாணவர் செயற்பாடுகளை ஏற்பாடு செய்ய முடியும்.

# பகுதி III

## 3.0 விடையளிக்கும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்

### 3.1. விடையளிக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள்

**பொதுவான அறிவுறுத்தல்கள்.**

* வினாத்தாளில் உள்ள முக்கியமான அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து விளங்கி விடையளிக்க வேண்டும். எது கட்டாயமான வினா, எவ்வளவு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது, எத்தனைப் புள்ளிகள் கிடைக்கும் போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்பதோடு வினாக்களை நன்கு வாசித்து தெளிவான விளக்கத்துடன் வினாக்களை தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

* I ம் வினா பத்திரத்திற்கு விடையளிக்கும் போது சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையினை தெரிவு செய்ய வேண்டும். சரியான விடைக்குரிய இலக்கத்தை பல்தேர்வு விடைப்பத்திரத்தில் புள்ளடியிட்டு அடையாளப்படுத்த வேண்டும்.

* II ம் வினாப்பத்திரத்தில் முதலாவது வினாவுக்கு கட்டாயம் விடையிக்க வேண்டும்.

* முதலாவது வினா உட்பட மேலும் நான்கு வினாக்களை தெரிவு செய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

* சரியானதும் தெளிவானதும் கையெழுத்தில் விடை எழுத வேண்டும்.

* பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை எல்லா பக்கங்களிலும் குறிப்பிட வேண்டும்.

* வினா இலக்கம், பிரிவு இலக்கம், உபபிரிவு இலக்கத்தை சரியாக எழுத வேண்டும்.

* சுருக்கமான விடையினை எழுத வேண்டிய சந்தர்ப்பங்களில் விரிவான விளக்கத்தினை அளிக்காது இருப்பதுடன் விபரமாக விடையளிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் சுருக்கமாக விடையளிப்பதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

* வினா கேட்கப்படும் விதத்திற்கு ஏற்ப விடயங்களை தர்க்க ரீதியாகவும் பகுப்பாய்வு அடிப்படையிலும் முன்வைக்க வேண்டும்.

* II ம் வினா பத்திரத்தில் விடையெழுதும்படி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு மாத்திரமே விடையக்க வேண்டும். மேலதிகமாக வினாக்களுக்கு விடையளிப்பதற்காக நேரத்தை விரயம் செய்ய வேண்டாம்.

* விடையெழுதும் போது சிவப்பு நிறப் பேனையோ அழிமையோ பயன்படுத்தக் கூடாது.

* விடைத்தாளில் சரியான முறையில் பக்க எண்களுக்கு ஏற்ப இணைக்க வேண்டும்.

**விசேட அறிவுறுத்தல்கள்.**

* விடயங்களைக் குறிப்பிடலும் தெளிவுபடுத்தலும் அல்லது உறுதிப்படுத்துவதற்கு ஏற்ப புள்ளிகளின் தரங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.
* கட்டமைப்பு வினாக்களில் உதாரணங்கள் மற்றும் காரணிகளை முன்வைக்க வேண்டும்.
* மதிப்பீட்டு இலகுக்காகத் தேவையான இடங்களில் பந்திகளை வேறாக்க வேண்டும்.
* ஒழுங்குமுறையில் விடைகளை வழங்க வேண்டிய சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் கவனம் செலுத்தல்.

3.2. * * **கற்றல் கற்பித்தல் செயன்முறை பற்றிய கருத்துக்களும் ஆலோசனைகளும்**

**அதிபர்களுக்கான ஆலோசனைகள்**

* பாட விருத்திக்காக வருடாந்தத் திட்டத்தை தயாரிப்பதற்கும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான வழிகாட்டல்கள் மற்றும் ஒத்துழைப்பினை மேலும் பரந்தளவில் பெற்றுக் கொடுக்க வேண்டும்.
* ஆசிரியர்களின் விடய அபிவிருத்திக்காக கோட்டம், வலயம், மாகாணம் மற்றுமு் அமைச்சு மட்டத்தில் நடைபெறும் செயலமர்வுகளுக்காக குறித்த ஆசிரியரைப் பங்குபற்றச் செய்ய வேண்டும்.
* கற்றல்- கற்பித்தலில் மேலும் விருத்தி செய்வதற்காக பாடசாலையினை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
* ஆசிரியர்களுக்கு தமது பாடம் தொடர்பான பொறுப்புக்களை வழங்கும் வகையில் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வாய்ப்பு வழங்குதல் வேண்டும்.
* சிறந்த மாணவர்களை ஊக்கப்டுத்தும் வகையில் வெகுமதிகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கும் செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

**பரீட்சார்த்திகளுக்கான ஆலோசனைகள் :**

* உரிய பாடநூல்களை பயன்படுத்துவது தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.
* தொடர்ச்சியாக அறிவை இற்றைப்படுத்திக் கொள்வதற்காக மேலதிக புத்தகங்கள் மற்றும் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவதில் அதிக கவனம் செலுத்து வேண்டும்.
* ஒவ்வொரு அலகு நிறைவிலும் பயிற்சியினை மேற் கொள்ள வேண்டும்.
* குடியியற் கல்வியைக் கற்பவர் என்ற வகையில் விசேடமான மனப்பாங்குகளையும் நடத்தை ரீதியான மாற்றங்களையும் ஏற்படுத்திக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

**ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள் :**

* கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டிற்காக சிறப்பாக ஆயத்தமாதல் மிக முக்கியமாகும்.
* பாடத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டி, பாடநூல் மற்றும் மேலதிக வள மூலங்கள் தொடர்பில் ஆசிரியர் அறிவினை பெற்றிருப்பதோடு அவற்றை பயன்படுத்துவது கட்டாயமானது.
* பாடத்திட்டத்தை முழுமையாக நிறைவு செய்ய வேண்டும்.
* ஆசிரியர் வழிகாட்டியிலுள்ள ஆலோசனைகள் செயற்பாடுகள் கணிப்பீட்டு மதிப்பீடுகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.
* ஆசிரியர் மாணவர்களின் அடைவு மட்டத்திற்கு ஏற்பவும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்பவும் ஆக்கபூர்வமான வகையில் செயற்பட வேண்டும்.
* கற்பிக்கும் போது தேடலின் ஊடாக கற்றல் அனுபவங்களை மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்கு வழிகாட்ட வேண்டும்.
* வினாத்தாள் கட்டமைப்பு மற்றும் அதற்கு விடையளிக்கும் கற்றல் சார் திறமைகள் தொடர்பில் மாணவர்களை தெளிவுபடுத்த வேண்டும்.
* கற்றல்- கற்பித்தல் நடவடிக்கைகள் தொடர்பில் மாணவர்களை தெளிவுபடுத்த வேண்டும்.
* தொடர்ச்சியாகப் பயிற்சிகளை செய்வித்தல் மூலம் விடையெழுதுவதற்கு சிறந்தவொரு பயற்சிகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.
* சமகால சமூகத்தகவல்களை தேடியறிவதற்காக மாணவர்களை ஈடுபடுத்தக்கூடிய கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டும்.
* ஆசிரியர் பாட விடயங்களை தொடர்பாக சிறந்த அறிவைப் பெற்றிருப்பதோடு நவீன கற்பித்தல் நுட்பங்களை பயன்படுத்தி மாணவர்களின் மனதை கவரும் வகையில் அவற்றை முன்வைக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

* * இவ்வாறு அடையாளமிடப்பட்டுள்ள 47ம் பக்கத்தின் தொடக்கத்தில் இதனைப் போடவும்

கற்றல்- கற்பித்தல் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும்

* கற்றல் கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு செயன்முறைகள் ஊடாக பெறுபேற்றினை விருத்தி செய்தல்.
* கற்றல் துணைச் சாதனங்களை பயன்படுத்தல்.
* பாடம் தொடர்பான செயற்பாடுகளின் ஒழுங்கமைப்பு வலுவானதாக இருத்தல்.
* திட்டமிடப்பட்ட களப்பயணங்களை ஏற்பாடு செய்தல்.
* விடையெழுதும் போது தகவல்களை ஒழுங்கமைத்துக் கொள்ளும் திறனை விருத்தி செய்த கொள்வதற்கு பயிற்சியளித்தல்.
* வளவாளர்களின் உதவியினை பெற்றுக்கொள்ளல்.
* பாடசாலைகளுக்கிடையிலான சிந்தனைக் கிளறல் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்.
* விவாதங்கள் மற்றும் அறிவும் புதிர்போட்டிகள் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல்.
* ஊடகங்களை பயன்படுத்தி நடைமுறைத்தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு மாணவர்களை ஈடுப்படுத்தல்.
* பாடநூலைப் பயன்படுத்துவதற்காக ஊக்குவித்தல்.